வனையும் இலக்ஷ்மியுடனும் பார்வதியுடனும் தியானஞ்செய்தாலுமதினால் ஸாயுஜ்ய முக்த்தி விதித்தவனுக்கு மிலக்ஷ்மியும் பார்வதியுமின்றி யுலக பாலன ஸம்ஹார வியாபாரங்களுமின்றி மற்ற சுகஞ்சித்திக்குமென்று வியாஸஸூத்திரத்தில் தீர்மானித்திருக்கின்றது அங்ஙனமிருக்க இவ்விடத்தில் மகாவிஷ்ணுவென்றும் ஸதாசிவனென்றும் சொல்லியசப்தங்கள் மூர்த்தியற்ற நிர்விசேஷப்பிர்ம்ம பரங்களாதலா லனுசிதக்கொள்கையொன்று மில்லையென்று உ-வது குற்றத்திற்கு பரிகாரம் அகண்டசித்ரூபப் பிரம்மத்திற்கு ஸ்வதஸ்ஸித்தமான சிச்சகத்தியோகத்தால் பிரளயகால அக்கினிக்குப்போல் தன்னாலேயே உதித்தஉல்லாஸத்தால் ஜீவசிருஷ்டி கருமமும் தனதானந்தபோகமு மிருப்பதால் ஜீவேசுவரர்களின் கருத்திருத்துவ போகத்திருத்துவங்கள் போலில்லையென்று ௩-வது குற்றத்திற்கு பரிகாரம் ஆதலாலனுபவாத்துவைதியின் மதமே சரியென்றறியவேண்டியது இனி யிவ்வத்தியாத்ம வுபநிஷத்தின் தேசிகபரம்பரையைச் சொல்லியுபநிஷத்து முற்றுகிற தெங்ஙனமெனில்.

ஸ தாம் வித்யாமபாந்தரதமாய ததௌ அபாந்தரதமோ ப்ரஹ்மணே ததௌ ப்ரஹ்மா கோராங்கிரஸே ததௌ கோராங்கிரா ரைக்வாய ததௌ ரைக்வோ ராமாய ததௌ ராம: ஸர்வேப்யோ பூதேப்யோ ததாவித்யேதந்நிர்வாணாநுஶாஸநம் வேதாநுஶாஸநம் வேதாநுஶாஸநமித்யுபநிஷத் ஸுபாலோபநிஷத் ஸமாப்தா ||

இவ்வத்தியாத்ம வித்தையை யவாகந்தரதமனென்று பிரசித்தரான விஷ்ணுவுக்குக் கொடுத்தவரின்னாரென்று சொல்லாவிட்டாலும் தெக்ஷிணாமூர்த்தியாகிய பரமசிவனே கொடுத்தாரென்று நிச்சயிக்கத்தக்கது அவ்வவாந்தரதமர் சதுர்முகப்பிரம்மாவுக்குக் கொடுத்தார் பிர்ம்மாகோராங்கிரஸஸுக்குக் கொடுத்தார் அவர் ரைக்குவருக்குக் கொடுத்தார் அவர் இராமனுக்குக்கொடுத்தார் அவர் ஸகலப் பிராணிகளுக்குங் கொடுத்தாரென்றிது நிர்வாணமென்ற மோக்ஷத்தி னனுசாஸனமென்று உ. தரஞ் சொன்னது உபநிஷத்தின் முடிவை ஸூசிப்பிக்கிறதென்றறியத்தக்கது.

சங்கை.

இவ்வுபநிஷத்துகளை யிங்ஙனம் தமிழில் வியாக்கியானித்ததினால் ௪-வது வருணத்தாரும் பார்க்கும்படி நேரிட்டு வியாஸர்முதலிய மகரிஷிகள்விலக்கினதற்கு விதிநேரிடுகிற படியாலிது பெரிதான குற்றமென்பதற்கு.

உத்தரம்.

வியாஸர் முதலிய ஸகலரிஷிகளும் முமுக்ஷுக்களான ௪-வது வருணத்தாருக்கும் வேதப்பொருளை யிதரபாஷைகளால் போதிப்பிக்கலாமென்றுசொன்னதாக ஸூதஸம்ஹிதை முதலிய புராணங்களில் தெரியவருவதால் ஸகல வர்ணிகளுக்கு முபநிஷத்துகளின் பொருளையுபதேசிப்பது குற்றமல்லவென்றறிய வேண்டியது.—இங்ஙனம் பாலபோதினியில் க-வது தத்துவநிர்ணய பிரகரண முற்றிற்று.

உ—வது ஜீவோத்பத்திப் பிரகரணம்.

இனி ஜீவனுக்கு பத்தியில்லையென்று சொல்கின்ற விசிஷ்டாத்துவைதிகளுக்கும் சுத்தாத்துவைதிகளுக்கும் வெகுச்சுருதிகள் விரோதிகளென்று காண்பிக்கிறதற்கு உ-வது பிரகரணமாரம்பிக்கப்படுகிறது.

𑌛𑌾𑌨𑍍𑌦𑍋𑌗𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 । 𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌦𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑌿𑌤𑌿 । 𑌐𑌤𑌰𑍇𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 । 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌇𑌦[illegible] ॥

சாங்தோக்கியம் ஐதரேயம் முதலிய அனேக வுபநிஷத்துகளிலுத்பத்திக்கு முன் ஸத்தென்றும் பிரம்மமென்றும் ஆத்மாவென்றுஞ் சொல்லப்பட்டவொருவஸ்து விருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விடத்திலுலகவுத்ப்பத்திமாத்திரஞ் சொல்லக்கருத்தேயன்றி ஜீவோத்பத்தியைச் சொல்லக்கருத்தில்லையெனக்கூடாது, இப்பூதங்களெதிலிருந் துண்டாயினதுகளோவென்றுதைத்திரிய வுபநிஷத்தின் வாக்கியங்களிலிருக்கின்ற பூதசப்தத்தா

ல் பிராணிகளினுத்பத்தியே யறியப்படுகின்றது பூதசப்தம் புவனபரமல்ல வென்று ஸூத்திரக்காரரின வசனத்தாலுந் தெரியவருகிறது. க-வது ஸூத்திரத்தால் பிரமேயமானப்பிரம்மமும், ௩-வது ஸூத்திரத்தால் பிரமாணமான சாஸ்திரமுஞ் சொல்லப்பட்டதினுல் உ-வதான இச்சூத்திரத்தால் பிரமாதாவான ஜீவனே சொல்லப்படுவது நியாயம். ஆதலாலனுபவாத்துவைதியால் சொல்லப்படுகிற ஜீவோத்பத்திவாதமே பிரமாணமுடையதென்றறியவேண்டியது.

[illegible]

இனியும் முண்டகோபநிஷத்தில் தீப்பொரி திருஷ்டாந்தத்தால் ஜீவோத்பத்தியறியப்படுகின்றது ஆனுல் பொரிகள்போ லுதித்ததுகளுக்கு நாசஞ்சொல்லப்பட்டிருப்பதால் ஜீவன் மோக்ஷவுபதேசத்திற்கனர்கனும் விடுவானென்று சங்கிக்கத்தக்கதல்ல ஏதெனில் காரணமான அந்தப்பிர்ம்மத்திலேயே லயத்தைச் சொன்னதினுல் மோக்ஷத்திற்கு விரோதமில்லையல்லவா இதுநிற்க ஜீவனுக்கு வுத்பத்தியை யொப்பாதபக்ஷத்தில் ஸத்காரியவாதம் சித்தியாது அம்சமான ஜீவனுக்குக் காரியத்துவமும் அம்சியானப் பிர்ம்மத்திற்கு காரணத்துவமும் சித்தித்தாலேயே அது நீயாகிறுயென்ற ஜீவப்பிரம்மைக்கியவாதம் ஸார்த்தகமாகும் ஆதலால் ஸர்வவிதத்திலும் ஜீவோத்பத்திவாதத்தை முமுக்ஷுகளடுக்க வேண்டியதவச்சியமென்று சித்தித்தது.

[illegible]

நநு ஜீவா: | ஜீவா நாம்ஶா விஸ்ஃபுலிங்கவ்யபதேஶ்யா: ஸ்யுரிதி சேந்ந | விஸ்ஃபுலிங்கா ஹ்யக்நேஸ் ஸஜாதீயா ஏவ ந விஜாதீயா: | யதி விஜாதீயாஸ்ஸ்யு: | ததாவ்யக்தாத்யுபாதய இதி வக்தும் ஶக்யம் | நது ததாஸம்பவதி | தஸ்மாச்சிதம்ஶாநாம் ஜீவாநாமுத்பத்திவிஷயிண்யேவ ஶ்ருதிரிதி நிஶ்சய: ||

சங்கை—அவ்வியக்த்தம் முதலியவுபாதிகளே பொரிகள்போல் சொல்லப்பட்டவைகள் ஜீவர்களல்ல ஏதெனில் ஜீவர்களொருக்காலும் பிரம்மத்திற்கன்னியர்களாக வில்லையல்லவாவென்பதற்குத்தரம் பொரிகளக்கினியின் ஸஜாதிகளேயன்றி விஜாதிகளல்ல விஜாதிகளாகிலப்பொழுது அவ்வியக்த்தமுதலிய வுபாதிகளென்று சொல்லலாம். அங்ஙனமாகவில்லை ஆதலால் சித்தினம்சர்களான ஜீவர்களினுத்பத்தியைச் சொன்னதே சுருதியென்று நிச்சயம்.

நநு அம்ஶோ நாநாவ்யபதேஶாதித்யாதிஸூத்ரீய வசநாத் ஸ்ம்ருதௌ மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந இதி ஸ்ம்ருதேஶ்ச ஶுத்தாத்வைதிபாஷ்யகாரை: அம்ஶ இவாம்ஶ இதி | அதோ ஜீவஸ்ய ப்ரஹ்மாம்ஶத்வம் கௌணமேவாங்கீக்ருதமிதி சேந்ந ஸூத்ரகாரேண ஸ்ம்ருதிஸ்த ப்ரயோக்த்ருத்வாபாவாத் | நசைவ ப்ரயோக்துரதிபார: | தஸ்மாத்தத்பாஷ்யமஸங்கதமேவேதி ஸ்திதம் ||

சங்கை—ஸூத்திரத்திலும் ஸ்மிரிதியாகிய பகவத்கீதையிலும் பாஷ்யக்காரருன சுத்தாத்துவைதி அம்சம்போலம்சமென்று சொல்லியிருப்பதால் ஜீவன் பிரம்மாம்சமென்பது கவுணபக்ஷமெனில் பொலென்ற பதத்தை ஸூத்திரக்காரர் சொல்லவில்லை. அப்பதத்தைப் பிரயோகிப்பவருக்கு வெகுபாரமல்ல ஆதலாலப்பாஷ்யம் அஸங்கதமென்றே நிலைத்தது.

தஸ்மாத் ப்ராக்ஸ்ருஷ்டேர் ஜந்மரஹிதத்வே ப்ரஹ்மண ஸகாஶாஜ்ஜந்மவதோ ஜீவ: ப்ராதுர்பவதீதி சேத்தத்ராவ்யுக்த: | ப்ராக்ஸ்ருஷ்டேர்ஜந்மரஹிதஸ்ய ப்ரஹ்மணி ப்ராக்ஸ்ருஷ்ட்யா ஜந்மரஹிதஸ்ய உபாதேர்வ்யபதேஶோ ய: ஸாவகாஶ இதி ||

ஆனால் காணப்படுகிற வுலகத்தினுத்பத்திக்கு முன் பிரம்மத்திலிருந்துண்டான ஜீவனெதில் வஷித்தானெனில் ஸூக்ஷம வுலக வுத்பத்திக்கு முன் பரப்பிரம்மத்திலும் தூலவுலக வுத்பத்திக்குமுன் பரமேசுவரனதுவுபாதியான மாயையிலும் வஷித்தானென்றறியத்தக்கது. இனியத்தியாஸத்தைப்பற்றி முன் சொல்லியானபோதிலும் விசேஷமாகச் சொல்லவேண்டிய அம்சங்களிருப்பதால் சொன்னதைச்சொன்ன குற்றத்தை யெண்ணக்கூடாது. காணப்படுகின்றவிவ்வுலகங்களெல்லா மிரஜ்ஜுவில் ஸர்ப்பம்போல்கற்பிதங்களென்று சுத்தாத்துவைதிகளால் தீர்மானமாகச் சொல்லப்படுகின்றது.

இதில் கேள்வி.

இத்திருஷ்டாந்தம் தார்ஷ்டாந்திகத்தில் சேரவில்லை யெதெனில் திருஷ்டாந்தத்தில் அதிஷ்டானமான இரஜ்ஜு க. கற்பிக்கப்பட்ட ஸர்ப்பம் உ. கற்பித்தவனாகிய புருஷன் ௩. இம்மூன்றுகளுமிருந்ததுகள் தார்ஷ்டாந்திகத்தில் அதிஷ்டானமாகிய பரப்பிரம்மமொன்றே இருந்ததேயின்றி மற்ற உ-யில்லை. இவ்விரண்டும் முன்னிருந்ததுகளேயெனில் அப்பொழுது ஸகலசாஸ்திரப் பிரசித்தமான அத்துவைதப் பிரம்மவாதத்திற்கு விரோதம் நேரிடும் ஆனாலுலகத்தைக் கற்பித்தஜீவன் வேறல்ல பிர்ம்மமே தன்னிடத்திலுலகத்தைக்கற்பித்துக் கொண்டதெனில் அங்ஙனமாயினு முலகமென்றும் பிர்ம்மமென்றும் துவைதம்நேரிடுகின்ற குற்றம் க. பிரம்மம் பிராந்தியுடையதென்ற குற்றம் உ. இங்ஙனமனேக குற்றங்கள் நேரிடும். ஆதலாலிரஜ்ஜுஸர்ப்ப திருஷ்டாந்தப்படி விவர்த்தவாதத்தை யனுசரித்து வுலகம்பொய்யென்று சுத்தாத்துவைதிகள் சொல்வது சரியல்ல. ஆனால்மிருத்கடம் சுவர்ண குண்டலம் முதலிய திருஷ்டாந்தப்படி பரிணாமவாதத்தை யனுஸரித்தும் தந்துவூர்ணநாபி பிதிருபுத்திரன் முதலிய திருஷ்டாந்தப்படி யாரம்பவாதத்தையனுஸரித்து முலகங்களுக்குத்பத்தி ஸ்திதிலயங்களை விசிஷ்டாத்துவைதிகள் சொல்வது சரியாமெனில் விவர்த்தவாதத்திற் கவகாசமற்றதினாலதுவும்சரியல்ல இது நிற்க ஜீவனது புண்ணிய பாவகருமங்கள் பீஜாங்குரநியாயமாயனாதிகளென்று சுத்தாத்துவைதிகளால் சொல்லப்படுகின்றது.

இதிலும் கேழ்வி.

ஜீவனது பிந்திய ஜன்மங்களில் செய்யப்பட்ட கருமங்கள் பீஜாங்குரங்களானபோதிலும் முதலாவது ஜன்மமுண்டாகிறதற்குக் காரணமாகமுற்கருமமில்லையே சீவனது வுத்பத்திகாலமிதென்று குறிப்பிட முடியாமை

யிருந்தபோதிலும் தீப்பொரிபோலுண்டானதாகச் சுருதியில் சொல்லியிருப்பதாலவனுக் குத்பத்தியை யெப்பொழுதாவ தொப்புக்கொள்ளவேண்டிய தவச்சியமென் றிங்ஙனமாக்ஷேபித்தால் புண்ணிய பாவ கருமங்கள் பொய் யென்று சுத்தாத்துவைதிகள் சொல்லுகின்றனர் இதுசரியல்ல ஆனல் விசிஷ்டாத்துவைதிகள் சொல்வதென்னேயெனில் கருமங்களனுதிகளென்றும் ஜீவன்நித்தியனுதலா லுத்பத்தியேயில்லேயென்றும் சொல்லுகின்றனர். தீப்பொரிபோலென்றச் சுருதிக்கேவெனில் பூதபவுதிக விகாரங்களினுத்பத்திவிஷயமென்று பொருளேயிருவரும் சொல்லுகின்றனர் அதுவும் சரியலல. ஏதெனில் பொரியானது தீயினம்சமானதுபோல் ஜீவன் பிரம்மத்தினம்சமாவானேயின்றி ஜடபவுதிகவிகாரங்களென்பதற்கிடமில்லே ஆதலாலவ்விரண்மெதங்களாலும் ஜீவனதுமுதக் கருமந்தெரிய மார்க்கமில்லே. இங்ஙனமே யுலகத்தில் பிரசித்தங்களான மற்றதுவைதமுதலிய மதங்களாலும் தெரிய மார்க்கமில்லேயென்றிவ்வித இரண்டுகேழ்விகளில் க-வதுக்கு அனுபவாத்துவைதியால் தனதுமதப்படி சொல்லப்படுகிற

உத்தரம்.

உலகங்களுக்குத்பத்தி ஸ்திதி லயங்களே விசிஷ்டாத்துவைதிகள் சொல்வது சரியாம். ஆயினுமவர்கள் காரியகாரணங்களே நன்குய் விவரித்துச்சொல்லாத குற்றம் பெரிதாயிருக்கின்றது. ஆனலவைகளே விவரிப்பதெங்ஙனமெனில் காரியங்களான வுலகங்கள் தூல ஸூக்ஷம காரணங்களாக ௩-விதஙகள் அதில் க-வது தேகம்முதலிய பஞ்சீகிருதப்பிரபஞ்சம் உ-வது லிங்கதேகமென்ற அபஞ்சீகிருதப் பிரபஞ்சம் ௩-வது சுத்தபஞ்சபூதங்கள் காரணங்களான பிரம்மங்களும் ௩ விதங்கள் அதில் க-வது சதுர்முகப் பிரம்மா உ-வது பிரகிருதி புருஷன். ௩-வது சிச்சக்தி பிரம்மம். பிரளயகாலத்திலிதுமூன்ருவதாயினு முத்பத்திகாலத்தில் முதலாவதாம். இதுவும் சக்தியுடையதாதலால் சக்தியற்ற நிர்க்குணப் பிரம்மமாக விலேயேயெனில் உளதுஆயினும் அவ்விதநிர்க்குணப்பிரம்மம் சகலவுலகங்களின் பிரளயானந்தரம் சேஷிக்கின்ற வஸ்துவேயின்றி யுத்பத்திக்கு முன்னிருந்ததல்ல ஏதெனிலிதே முன்னிருந்தாலுலக வுத்பத்தியே சித்தியாது மற்றதேபின் சேஷித்துநிற்குமென்றல் முக்தருக்கு மருபிரவியருது ஆதலாலுத்பத்திக்குமுன் சித்ருப பிரம்மமும் பிரளயத்திற்குப்பின் நிர்க்குணமென்ற வருபப் பிரம்மமுமாகுமென்று ஒப்புக்கொள்ளவேண்டியது. ஒரேப் பிரம்மமே உத்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணமென்று வெகுச் சுருதிகள் சொல்வதற்கு விரோதம் நேரிடுமேயெனில் அச்சுருதிகளெல்லாம் அவாந்தரநைமித்திக வுத்பத்திப்

பிரளயகாலத்தை யுத்தேசித்து வந்ததுகளையன்றி முக்கியமான ஆதியுத்பத்தி லயகாலத்தை யுத்தேசித்து வந்ததுகளல்ல இங்ஙனம் பிரம்மம் ௪. என்பதற்குச் சுருதிப் பிரமாணமிருக்கின்றதோவெனில் அனந்தச சுருதிமுதலியப் பிரமாணங்களிருக்கின்றன. ஆயினும மஹா நாராயண வுபநிஷத்தில் -௪- பாதங்களுடையதுப் பிரம்மமென்றும், ௫-வது அதீதமென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. இவ்வைந்துப் பிரம்மங்களும் ரிக்கு முதலிய ௪ வேதங்களின் ௪ மகா வாக்கியங்களின் பொருளாகவும் மகா வாக்கியங்களுக்கும் எட்டாததென்ற மற்றொரு சுருதியின் பொருளாகவுமாகும். மாயா சபளிதமென்றும் பிரகிருதி சபளிதமென்றும் சிச்சக்தி சபளிதமென்றும் முன் சொல்லிய -௫- பிரம்மங்களில் ௧-வது தூலப் பிரபஞ்ச வுத்பத்திக்குக் காரணமாயினும் அதின் பிரளயத்திற்குக் காரணம் ௨-வதான பிரகிருதிபுருஷனே யாவான். ஆனால் ஸூக்ஷமாதி மற்றப் பிரபஞ்சப் பிரளயத்திற்கு காரணங்களிலையோவெனில் குணத்திரயத்தால் பிரகிருதி மூன்று விதமாயிருப்பதால் அதில் தாமஸ புருஷனிடத்தில் தூலப் பிரபஞ்சப் பிரளயமும் இராஜஸ புருஷனிடத்தில் ஸூக்ஷமப் பிரபஞ்சப் பிரளயமும் ஸாத்துவிக புருஷனிடத்தில் காரணப் பிரபஞ்சப் பிரளயமுமானபின் துரீயமான சித்ருபப் பிரம்மத்தில் துரீயப் பிரபஞ்சம் லயிற்றபொழுது அந்தப் பிரம்மமும் வெறகற்ற அக்கினிபோல் தன்னுலுபசாந்தமானபின் ௫வது அருபப்பிரம்மம் சேஷிக்குமானால் துரீயப்பிரபஞ்சமெதெனில் சுத்தபஞ்சபூதங்கள் காரணப்பிரபஞ்சமென்று சொல்லப்பட்டதல்லவா அதற்கு மேலான அவ்வியக்த்தமஹத்தகஹங்காரங்களென்றதத்துவங்களே துரீயப்பிரபஞ்சமென்றறியத்தக்கது இங்ஙனமேற்பட்ட ஸிருஷ்டிவாதத்தில் முதல் பிர்ம்மகல்ப்பத்தில் சதுர்முகப்பிரம்மாவால் ஸிருஷ்டிக்கப்பட்ட தூலபிரபஞ்சத்தைப் பார்த்து அச்சம்ஸ்காரமென்ற வாசனை ஜீவனது மனதில் தங்கியிருந்ததினுல் மருகல்ப்பங்களிலதுபோலிருக்கின்ற தூலப்பிரபஞ்சத்தைப்பார்த்தவுடனே இரஜ்ஜுஸர்ப்பம் போல்ஜீவனுக்குத்தோற்றுவது நியாயமேயல்லவா. ஆனால் பிரபஞ்சத்தில்பிரபஞ்சம் கற்பிதமாயிற்றேயின்றி பிரம்மத்தில் பிரபஞ்சம் கற்பிதமாகவில்லையேயெனில் சதுர்முகப்பிரம்மாவென்ற மாயாசபளிதப்பிரம்மத்தில் வாஸ்தவமான தூலப்பிரபஞ்சமும் ஜீவனென்ற அவித்தியாசபளித பிரம்மத்தில் வாஸனுமயமான தூல்ப்பிரபஞ்சமுமிருப்பதால் குற்றமில்லை ஆதலால் வாஸ்தவப் பிரபஞ்சத்தின் பிரளயகாலத்தை யெதிர்பாராமலே ஜீவனுக்கு வாஸனுமயப் பிரபஞ்சப்பிரளயத்தாலிப்பொழுதே ஸத்தியோமுக்த்தியென்ற ஜீவன்முக்த்திசித்திக்கக்கூடுமென்று முதலாவது கேழ்விக்குத்தரமாயிற்று இனியிரண்டாவது கேழ்விக்கு மனுபவாத்துவைதியால் சொல்லப்படுகிற

உத்தரம்.

ஜீவனது வுத்பத்திக்கு முன்னவனை ஸிரிஷ்டித்த கருமமே ஸகல புண்ணிய பாவகருமங்களுக்கு மாதிபீஜமாயிற்று அக்கருமமவனதம் சியான பரப்பிர்ம்மத்திற்கே ஆயினும் தான் விளையாட்டாகச்செய்த கருமத்தால் ஜீவர்கள் ஸம்ஸாரதுக்க ஸமுத்திரத்தில் முழுகும்படி நேரிட்டதைச் சிந்தித்து பச்சாத்தாபத்துடன் மறுபடியும் ஜீவர்கள் தன்னிடத்திலேக்கியத்தை யடையத்தக்க சாதனங்களைச் சொல்லிய வுபநிஷத்துகளென்ற நூல்களைச் செய்து தனதுகுற்றத்தைப் பிர்ம்மம் நீக்கிக்கொண்டது ஆனால் பிர்ம்மத்திற்க்கு தனுகரணங்களில்லாததினால் சிந்திக்கவும் ஸிரிஷ்டிக்கவுமிடமில்லையேயெனில் முன்சொல்லிய ௫ விதப்பிர்ம்மங்களைக் கிரமமாக சொந்தப்படுத்திக்கொண்ட பிர்ம்மா விஷ்ணு ருத்திர ஈசுவரன் ஸதாசிவனென்ற ௫ ஸகுணமூர்த்திகளுக்கும் தனுகரணங்களிருப்பதால்விடாத லக்ஷணையால் சொன்னது நியாயமே இங்ஙனம் ஜீவனுக்குப் புண்ணியபாவங்கள் விருத்தியடைந்ததை யறியாமலவைகள் பொய்களென்றாவது அனாதிகளென்றாவது சொல்வது நியாயமா ஜீவனும் கருமமுமனாதிகளாகில் பிர்ம்மத்தைப்போல் நாசமற்றவையென்றே நிச்சயிக்கவேண்டுமே அப்பொழுது மோக்ஷவாதமும் அத்துவைத வாதமும் வீணேயாம் ஆதலால் ஜீவன் பிர்ம்மத்திற் கன்னியனாகாமல் நித்தியனென்று சுத்தாத்துவைதிகள் சொல்வதும் அன்னியனாகி நித்தியனென்று விசிஷ்டாத்துவைதிகள் சொல்வதும் சரியல்ல வென்றறிய வேண்டியது.

கேழ்வி.

வனுக்கு வெகுஜீ ஜன்மங்களால் ௧, ௰, ௱, ௲. ஆக விருத்தியான கணக்கற்ற கருமங்களிருக்குமே இவைகள் நசியாமல் ஸம்ஸார பந்தத்திலிருந்து மோக்ஷம் சித்தியாதே ஆதலா லிக்கருமங்கள் நசிக்கிறதற்கும் மறுபடி கருமங்களுண்டாகாம லிருக்கிறதற்கும் தக்கவுபாயத்தை யறிய வேண்டும்.

உத்தரம்.

நித்தியா நித்திய விவேகந்தா லெச்சென்மத்தில் காம்மியக்கருமங்களைச் செய்யாமல் நித்தியநைமித்திய கருமங்களை மட்டிலும் செய்பத்துடங்கினானே அச்சென்மமுதல் நூதன கருமமில்லாததினால் மறுபடி கருமங்களுண்டாகாதுகள் முந்தியகருமங்கள் கணக்கற்றிருந்தபோதிலும் அதுமுதலாகாமியென்ற சிலஜன்மங்களிலச்சஞ்சித கருமங்களெல்லாம் புசித்துத்

தீரும் அச்சென்மங்களில் செய்யப்படுகின்ற வேதாந்தச் சிரவணமனனநிதித்
தியா ஸனங்களால் பிர்ம்மாத்மைக்கிய ஸம்யக்ஞானம் கிரமமாயுதித்து பிரா
ரப்த்தமென்ற சரமகருமத்தின் முடிவில்வாக்கு மனதுகளுக்கெட்டாத வரு
பப்பிர்மத்தை ஜீவனடைகிறபடியால் மறுஜன்மமுண்டாகக் காரணமில்லை
இங்ஙனம் சகலகருமங்களும் புசித்தே தீருமென்றப் பிரமாணவசனம் ஸார்
த்தகமாகிறபடியால் ஞானக்கினியானது ஸர்வகருமங்களையும் பஸ்மமாக்கு
மென்ற வசனம் காகதாளீய நியாயமாக ஸார்த்தகமாகுமென்றறியத் தக்
கது கருமியிடத்தில் ஞானக்கினி பிரபலப்படாதென்பது ஸகலருக்குந்
தெரிந்த சங்கதியாதலால் பஸ்மமாக்கிற வசனம் கவுணமே.

கேள்வி.

காம்மிய கருமத்தியாக மாத்திரத்தால் நூதனகருமோத்பத்திக்கிட
மில்லாமலும் ஸஞ்சித கருமங்களெல்லாம் புசித்துத் தீருவதால் மறுஜன்
மத்திற்க் கிடமில்லாமலுமாகிற படியால் மோக்ஷத்திற்காக தெரிசனச்சிர
வணாதி ஸாதனபரிச்சிரமங்களனாவசியங்களாகின்றன இது நிற்க நிஷ்கா
மகருமிக்கும் நூதனகாம்மியப் புண்ணியகருமங்களுண்டாகாதுகளேயின்றி
நூதனபாவகருமங்களுண்டாகும் ஏனெனில் போகமன்றி தேகமிருது பாவ
மன்றி போகஞ்சித்தியாது விவேகத்துடன் புசிப்பவருக்குண்டாகிற சொல்
ப்ப பாவங்கள் நித்தியநைமித்திய கருமங்களாலடிபட்டு விடுமென்றுஞ் சொ
ல்லக்கூடாது ஏனெனில் புண்ணியத்தால் சுகம்சித்திக்குமேயின்றி பாவ
மடிபடாதென்றும் பாவத்தால் துக்கம் சித்திக்குமேயின்றி புண்ணியமடி
படாதென்றும் ஸ்ரீமத் இராமாயாணத்திலும் பிரசித்தமாயிருக்கின்றதல்லவா
ஆதலால் நிஷ்காம கருமிக்கும் நூதனபாவ கருமோத்பத்திக் கிடமிருப்ப
தால் மறுஜன்மங்கள் வராமலிருக்க ஒருகாரணமுமில்லை யென்பதற்கு.

உத்தரம்.

ஷ்காமங்களானநி பிராயச்சித்த புண்ணியகருமங்களாலும் பாவங்
களடிபடாதுகளென்று நாமு முருதியாகவே சொல்கிறோம் விவேகஞ் ஞான
யோகிகளுக்கும் பிராரப்த்த தேகம்விழுகிறவரையில் புசிப்புநிமித்தம் பாவங்
கள் நேரிடும் ஸந்தேகமில்லை ஆயினும் ஞானபெலத்தால் வீரியமற்றுச்
செய்யப்படுகின்ற அப்பாவங்களையும் அப்புண்ணியங்களையும் அவரது சத்
துருமித்திரர்களடைவதால் குற்றமில்லை தெரிசனச்சிரவணாதி ஸாதனங்
களையடாதவருக்கு நிஷ்காமகருமங்களும் திடமாகாதுகள் காம்மியகருமங்
கள் தொயருவதால் மோக்ஷசாஸ்திரத்திற்க் கெவ்வளவு மதிகாரியாகார் ஆத
லால் நிஷ்காம கருமிக்கு மாத்மதெரிசனச் சிரவணாதி ஸாதனங்களையடுப்ப

தாவசியகமென்றே நிலைத்தது ஆனால் பிராயச்சித்தங்களால் பாவங்களழிபடாத பக்ஷத்தில் அவைகளைச்செய்வது வீணென்று சொல்லக்கூடாது ஏதெனில் ஞானாரம்பகமென்றும் தேகாரம்பகமென்றும் போகாரம்பகமென்றும் கருமாரம்பகமென்றும் கருமங்கள் ௪ விதங்களல்லவா அவைகளில் ௪வது இப்பிராயச்சித்தகருமங்கள் ௨வது கவிழ்த்த கலசத்தில் தங்கின வெளக்கெண்ணைபோல் முன்புசித்த சேஷகருமங்கள் ௩வது புசிக்கவேண்டிய முற்கருமங்கள் ௪வது இச்சென்மத்தில் செய்கிற புண்ணியபாவக் கருமங்களுக்குக் காரணங்களான முற்கருமங்கள் இங்ஙனமிருப்பதால் பிராயச்சித்தகருமங்களும் நிஷ்காமகருமங்களுடன் சேர்ந்து ஞானாரம்பகமாவதால் வீணாகாதுகள்.

கேழ்வி.

இங்ஙனம் ௪ விதகருமங்களால் ஜீவன் கட்டப்பட்டது வாஸ்தவமாகில் வாஸ்தவத்திற்கு நாசம்வரக்கூடாமையால் ஜீவனுக்கொருக்காலும் மோக்ஷம்வராது முக்காலத்திலும் ஜீவன் பிரம்மமென்றே தீர்மானித்திருக்கின்ற சுத்தாத்துவைதியின் மதத்திற்கு மிக்கருமவாதம் விருத்தம் அவ்வத்துவைத வாதமோவுலகத்தில் விஸ்தாரமாகி நிலைத்திருக்கின்றது ஆதலாலிக் கருமவாதத்தை விஸ்தரிப்பதனுவசியகமேயா மென்பதற்கு.

உத்தரம். 44958

வாஸ்தவமென்பது பாரமார்த்திகஸத்தியமென்றும் வியாவகாரிகஸத்தியமென்றும் ௨ விதமாக வொப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது அதில் பாரமார்த்திகஸத்தியத்திற்கொருக்காலும் நாசமற்றபோதிலும் வியாவகாரிகஸத்தியத்திற்கு நாசமுண்டென்று அச்சுத்தாத்துவைதிகளுஞ் சொல்லுகின்றனர் ஆனலிதுனலவர்களின் முக்கியக்கருத்தான முக்கால அத்துவைதவாதத்திற்கு நிலையாமை நேரிட்டதன்றவர்களறியவில்லை முக்கால அத்துவைதவாதமும் வியாவகாரிகத்துவைதவாதமும் சேருமா ஆதலாலவர்கள் தன்மதத்தின் பூர்வோத்தர விரோதங்களையு மறியாதவர்களென்று நிசயமாயறியத்தக்கது.

கேழ்வி.

வியாவகாரிகஸத்தியமென்பது இரஜ்ஜுஸர்ப[redacted]
ர்ப்பங்கடித்து மரித்தவனுலகத்திலில்லாததுபோல் வியாவகாரிக[redacted]
மங்களால் ஜீவன் கட்டுப்பட விடமில்லை அதுநீயாகிறு யென்ற மகாவாக்கிய

த்தால் ஜீவனும் அஸங்கசித் ரூபியான பரப்பிர்ம்ம மாதலால் கருமபெந்த முடையவனுகக் காரணமில்லை காரணமற்றபோதிலும் பிரத்தியக்ஷமாகவனு பவமிருக்கின்றதே யெனில் பிராந்தியால் நேரிட்ட வனுபவம் பிரமாண மாகுமோ ஆதலால் ஜீவனுக்குக் கருமபெந்தத்தை ஸ்தாபிப்பது சரியல்ல.

உத்தரம்.

யாவிவகாரி கஸத்தியமென்பது இரஜ்ஜுஸர்ப்பம் போலாகாது மிருத்கடம்போலாகும் மண்ணுக்கும் கடத்திற்க்கும்போல் பிர்ம்மத்திற்க்கும் ஜீவனுக்கும் பேதமிருப்பதால் ஜீவன் வியவகாரதெசையில் அஸங்கசித்ரூபி யான பரப்பிர்ம்மமே யென்பது சரியல்ல பிர்ம்மத்தினம் சமானவனுமாத்திர சைதன்னியமுடையவனுதலா லிவ்விதமானவனுக்குக் கருமபெந்தங்கூடும் பிரத்தியக்ஷானுபவமும் பரமார்த்தமான மோக்ஷாவஸ்தையை யபேக்ஷித்துப் பிராந்தியெனலாமே யின்றி யிப்பெந்தாவஸ்தையை யபேக்ஷித் தங்ஙனம் சொல்லக்கூடாது நீசன் தொட்டமண்ணைப் பிராம்மணன் தொடலாம் நீசன் தொட்டகடத்தை தொடக்கூடா தென்பதுபோல் ஜீவப்பிர்ம்மபேதம் சித் தித்தது.

கேழ்வி.

ஜீவப்பிர்ம்ம பேதத்தை ஸித்திப்பிக்கிறதற்குத் தானே வேதாந்த சாஸ்திரமுண்டாயிற்று இங்ஙனமாகிலது நீயாகிறாயென்று பேதத்தைச் சொல்லிய மகாவாக்கியமு மிரண்டாவதால் பயமாகுமென்றச் சுருதியும் வீ ணுகாதுகளா ஆதலாலப்பேதம் சித்தித்ததென்று சொன்னது மிகத்தப் பென்பதற்கு.

உத்தரம்.

தத்வமஸி | த்வி தீயாத்வை பயம்பவதி |

என்றசுருதிகளால் நிச்சயிக்கப்பட்ட ஜீவப்பிர்ம்மைக்கியம் பரமார்த் தமான மோக்ஷ அவஸ்தையை யுத்தேசித்தேயின்றி வியாவகாரிகமான பெ ந்த அவஸ்தையை யுத்தேசித்தல்லவே இப்பெந்த அவஸ்தையிலு மவ்வபே தமிருக்குமாகில் மோக்ஷத்திலென்னை விசேஷம் ஸூத்திரக்காரரான வியா ஸாசாரியரும் ததனன்னியத்துவ ஸூத்திரத்தால் பாரமார்த்திக் அபேதத்தை யும் போக்த்திராபத்தி ஸூத்திரத்தால் வியாவகாரிக பேதத்தையு முறுதிப் படுத்தி யிருக்கிறாரோ ஆதலால் வியவகாரதெசையில் ஜீவப்பிர்ம்மபேதத்தை ஸித்திப்பித்தது நியாயமே.

நநு ஜீவாபேதம் வாவ கிலேத³ம் ம்ரியதே ந ஜீவோ ம்ரியத இதி | நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் இதி ஶ்ருதிப்⁴ய: | உத்பத்த்யஸம்ப⁴வாத் | நாத்மா ஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்⁴ய: இத்யாதி³ஸூத்ரே ஸூத்ரக்ருஜ்ஜீவஸ்யோத்பத்திம் ப்ரத்யஷேத்ஸீத் | கத²மபி ஜீவோத்பத்திப்ரகரணமஸங்க³தமிதி சேந்நைஷ தோ³ஷ: ||

உக்தஶ்ருதிஸூத்ராணாம் ப்³ரஹ்மதோ ஜீவாநாமுத்பத்திப்ரதிஷேதே தாத்பர்யாபா⁴வாத் ப்ரதிஷேதே ச தாத்பர்யாத் ஶ்ருதி ப்⁴யோ ஹ்யேவமாத்மாபி³ஹ்ராஸ்யாசேதநாத் | யதா² ஸுதீ³ப்தாத்பாவகாத்³விஸ்பு²லிங்கா³: ஸஹஸ்ரஶ: ப்ரப⁴வந்தே ஸரூபா: ததா²க்ஷராதி³த்யேவம்ஜாதீயகஶ்ருதிப்⁴ய: | ஜந்மாத்³யஸ்ய யத: | ஸ்வாப்யயாதி³த்யேவமாதி³ ஸூத்ரேஷு ஜீவாநாமுத்பத்திப்ரலயயோர்விஹிதத்வாந்நாஸ்த்யத்ர தோ³ஷ: பரஸ்பரவிரோத⁴ஶ்சேதி ||

கேழ்வி.

மரணகாலத்தில் தேகம் மரிக்கின்றதேயன்றி ஜீவன்மரிக்கவில்லை யென்றும் ஜீவர்கள் நித்தியர்களென்றும் சுருதிகளிருக்கின்றன ஸூத்திரக் காரரும் ஜீவனுக்கு வுத்பத்தியை நிஷேதித்திருக்கிறார் ஆதலாலிஜ் ஜீவோ த்பத்திப் பிரகரணம் மிகவஸங்கதமென்பதற்கு.

உத்தரம்.

சொல்லிய சுருதி ஸூத்திரங்களெல்லாம் பிர்ம்மத்திற்கி தரத்திலு த்பத்திப் பிரளயங்களை நிஷேதிப்பதில் கருத்துடையவைகளேயன்றி வேறு கருத்துடையவைகளல்ல தீப்பொரியுபமையால் ஜீவர்களுக்கு பிர்ம்மத்தி லுத்பத்தியையும் அதிலப்பியயமென்ற நாசத்தையும் சுருதி, ஸூத்திரங்க ளே விதித்துமிருக்கின்றன ஆதலால் சொல்லியகுற்றத்தின் கெந்தமுமில் லையென்று நிச்சயமாயறியத் தக்கது.

கேழ்வி.

பிரதிபிம்ப ஜீவனுக்குப் பிம்பமான கூடஸ்தனிடத்திலேயே லயம் வரக்கூடும் கூடஸ்தனேகடா காசம்போல் பரிச்சின்னன் இவனிடத்தில்

ஜீவனப்பியாஸத்தால் லயித்தால் பின்பிம்பாதீதமான பரப்பிர்ம்மத்துடனைக்கியத்தையடையமார்க்கமில்லை ஆனால் வழுக்குப்பாறையில் கால்வைத்தவன் தன்னால் கீழேவிழுவதுபோல் கூடஸ்தனிடத்தில் லயித்தவன் தன்னால் பிர்ம்மத்தை யடைவானெனில் அதுசரியல்ல ஏதெனில் எங்ஙனமு பாவித்தானோ அங்ஙனமாவானென்று வெகுச்சுருதிஸ் மிருதிகளிருப்பதால் பிம்பாதீதப் பிர்ம்மவுபாஸனையின்றியதை யடையக்கூடாது அந்தப்பிர்ம்மமோ வாக்குமனதுகளுக் கெட்டாததென்று பிரசித்தமாயிருப்பதாலு பாவிக்கத்தக்கதல்ல ஆதலால் ஜீவப்பிர்ம்ம விஷயமான பிம்பம் பிரதிபிம்பவாதத்தையும் விலக்கி ஜீவப்பிர்ம்மைக்கிய வாதத்தையே முமுக்ஷுக்களறியவேண்டுமென்று வுபதேசிப்பது நலமெனில்.

உத்தரம்.

உளது முமுக்ஷுவான ஜீவன் பிம்பமான கூடஸ்தனுடைய வுபாஸனையிலே தனது அப்பியாஸத்தை முடிவுசெய்வானாகில் பிர்ம்மைக்கியத்தையடையான் ஆதலால் ஸ்வகுருவி னுபதேசத்தால் கூடஸ்தாத்மாவை தெரிசித்தவுடனே பிம்பாதீதமான அபரிச்சின்னப் பிர்ம்மத்தைத்தியான யோகத்தாலிடைவிடாமலு பாவிக்கவேண்டிய தவச்சியம் அதுவாக்கு மனதுகளுக் கெட்டாததல்ல அகண்ட ஸச்சிதானந்தஸ்வ ரூபமுடையதாதலால் வாக்குமனதுகளுக்கு விஷயப்படுமென்று வெகுதரம் சொன்னோம் வழுக்குப்பாறைஸ்தான முமிவ்வகண்டப் பிர்ம்மமேயின்றி கூடஸ்தனாகாது இந்த நிர்க்குண ஸச்சிதானந்தப் பிர்ம்மத்தை யஜுர்வேத மகாவாக்கியப்படி யான் பிர்ம்மமாகிறேனென்று நிரந்தர அபேதோபாஸனையின் முடிவில் நிர்க்குணாதீதவ ரூபப்பிர்ம்மத்தைத் தன்னால் ஜீவனடைகிறபடியாலு பாவித்த படியாவானென்ற சுருதியை யபேக்ஷியாமல் அரூபப்பிர்ம்மம் சித்திக்கிறது ஆதலால் பிம்பப்பிரதி பிம்யவாதத்தை விலக்கவேண்டிய அவசியமில்லை முமுக்ஷுகள் ஜீவப்பிர்ம்மைக்கிய வாதத்தை ஸாமவேத மகாவாக்கியப்படி குருமுகமாயறிந்தபோதிலும் பின்னவ்வைக்கியஞ் சித்திக்கிறதற்காக நிதித்தியாஸனமென்ற வுபாஸனையை யடுக்கவேண்டிய தவசியமாயிருப்பதால் பிம்பப்பிரதிபிம்பவாதத்தை யடுப்பதிலொரு விரோதமுமில்லை யென்றறிய வேண்டியது.

கேழ்வி.

பிம்பமான கூடஸ்த ஆத்மாதுவம்பத லக்ஷியார்த்தம் பிரதிபிம்பமான ஜீவாத்மாதுவம்பதவாச்சியார்த்த மிவ்விரண்டாத்மாக்களையும் பகுத்துச் சொல்லிய சுருதியெதென்பவருக்கு வுத்தரம்.

𑌸𑌾𑌵𑍃𑌤𑍀𑌰𑌹𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿 । 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑍁𑌰𑌤𑍋𑌭𑌾
𑌤𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌦𑍇𑌹𑌨 𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌚𑌿𑌤𑌿𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 𑌸𑌮𑌾𑌵𑍇𑌶𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌸𑍍𑌸𑍍𑌯𑌾
𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌵𑌹𑌾𑌰𑌿𑌕 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 ॥

இதின்பொருள் ஸாக்ஷியின் முன்வெளங்குகிற அல்லது தோற்றுகிற லிங்கதேகத்துடன் சேர்ந்த சைதன்னியம் சாயையில் பிரவேசத்தால் வியாவகாரிக ஜீவனுவான் அவஸ்தாத்திரய ஜீவத்திரயாதி ஸாக்ஷியானது ரீயகூடஸ்த பிம்பாத்மாவின் முன்ஸுஷுப்த்தன் பிராஞ்ஞன் பாரமார்த்திகனென்று பெயர்களுடைய ஜீவனுல் வெளங்குகிற ஸூக்ஷ்ம தேகத்துடன் சேர்ந்த சைதன்னியம் சுவப்ன கல்பிதன் தைஜஸன் பிராதிபாஸிகனென்ற பெயர்களுடைய ஜீவனுகிச் சாயையென்ற தூலதேகத்தில் பிரவேசித்ததினுல் சிதாபாஸன் விசுவன் வியாவகாரிகனென்ற ஜாக்கிர ஜீவனுயிற்றென்று கருத்து.

கேழ்வி.

இக்கூடஸ்தனை ஸாக்ஷியென்று சொல்லக்கூடுமோ எவ்வஸ்துவுக்குமேலொன்றுமில்லையோ அதையல்லவா ஸாக்ஷியெனக்கூடும் இங்ஙனமே சுருதியும் காணுகின்றதே

𑌏𑌕𑍋𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌰𑍍𑌵
𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 । 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑍇
𑌤𑌾 𑌕𑍇𑌵𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚 ।

இதின்பொருள் ஒருவனும் தேவனும் ஸர்வபூதங்களிலும் மறைந்திருக்கிறவனும் ஸர்வவியாபியும் ஸர்வபூதங்களினந்தராத்மாவும் கருமங்களுக்கத்தியக்ஷனும் ஸர்வபூதங்களிலும் வஸிக்கிறவனும் ஸர்க்ஷியும் சைதன்னியஸ்வரூபியும் கேவலனும் நிர்க்குணனுமாகிறுனென்ற இதில் ஸாக்ஷியென்ற வஸ்துஸர்வ வியாபகமாகச் சொல்லப்பட்டிருப்பதால் நிஷ்பிரதியோகிகமானவரூபப்பிரம்மத்திற்கு மேலொன்றுமில்லாததினுலு மதையே ஸாக்ஷியெனலாமேயின்றி பிம்பமான இக்கூடஸ்தனையாவது பிம்பாதீதமான ஙப்பிரதியோகிக சித்ரூபப் பிர்ம்மத்தையாவது ஸாக்ஷியென்பது சரியல்லவெனில்,

உத்தரம்.

பிம்பனான கூடஸ்தாத்மா வியஷ்டிஸாக்ஷி பிம்பாதீதமான ஸப்பிரதியோகிக சித்ரூபப் பிர்ம்மம் ஸமஷ்டிஸாக்ஷி ஆதலால் நிஷ்பிரதியோகிகப் பிர்ம்மம் முடிவாகச்சேஷித்த வஸ்துவாயினும் ஸர்வதருமங்களு மற்றபடியா லதினிடத்தில் ஸாக்ஷித்துவ தருமத்தைச் சொல்வது சரியல்ல சொல்லியசுருதியும் ஸப்பிரதியோகிக சித்ரூபப் பிர்ம்மபரமேயாம் இதிலேயே நன்ருகப்பொருந்தியிருக்கின்றது ஆனால் பிம்பாதீத சித்ரூபப் பிர்ம்மத்தை ஸாக்ஷியென்று சொல்வதற்குச் சுருதிப்பிரமாண மிருப்பதுபோல் பிம்பமான கூடஸ்தனை ஸாக்ஷியென்று சொல்வதற்குச் சுருதிப்பிரமாண மிருக்கிறதோ வெனில்.

த்ரிஷு-தாமஸு-யத்போக்யம்போக்தா போகச்சயத்பவேத் தேப்யோவிலக்ஷண ஸ்ஸாக்ஷீ சின்மாத்ரோஹம் ஸதாசிவ: ।

இதின் பொருள் ஜாக்கிரம் சுவப்னம் சுழுத்தியென்ற ௩ ஸ்தானங்களிலும் புசிக்கத்தக்கன தும்புசிக்கிறவனும் புசிப்பும் எதெதாகுமோ அவைகளுக்கு விலக்கணனும் ஸாக்ஷியும் சின்மாத்திரனுமான ஸதாசிவனேயானென்ற இதில் யானென்பது கூடஸ்தனல்லவா ஆதலால் வியஷ்டி ஸாக்ஷியும் பிரமாணமுடையவ னென்றறியத்தக்கது.

கேழ்வி.

பிம்பமாக கூடஸ்தாத்மாவையும் பிரதிபிம்பமாக ஜீவாத்மாவையும் நிரூபித்ததைபார்க்கும்பொழுது ஸ்தூலஸூக்ஷ்மகாரண துரீயங்களான தேகங்களுக்கு வுத்பத்தி காணுகிறதேயின்றி வாச்சியார்த்தர்களான ஜீவர்களுக்கு மிலக்ஷியார்த்தமான கூடஸ்தனென்ற ஜீவனுக்கு முத்பத்திகாணவில்லை ஆதலால் ஜீவோத்பத்தி வியவகாரம் அவித்தையென்ற துரீயதேகத்தையும் ஆவரணமென்ற காரணதேகத்தையும் ஸூக்ஷ்ம விக்ஷேபமென்ற ஸூக்ஷ்மதேகத்தையும் தூலவிக்ஷேபமென்ற தூலதேகத்தையும் கிரமமாயடுத்ததேயின்றி ஜீவனையடுத்த தல்லவென்று நிச்சயம்.

உத்தரம்.

வராஹோப நிஷத்தில் ௩ தேகங்களென்று சொன்னது போல் ௩ ஜீவர்களென்றும் சொல்லி ௩௬ தத்துவங்களை சரிக்கட்டியிருப்பதால் ஜீவனொருவனென்றுமவன்வியவகாரதெசையில்பிர்ம்மததிற்கன்னியனல்லவென்றும்

சொல்லவிடமில்லை சொல்லிய ஜாக்கிரமுதலிய ச அவஸ்தைகளிலும் ஜீவர்களுக்குப் பெயர்கள் வெவ்வேறாகவிருப்பதாலுருவங்களும் வெவ்வேறாகவிருப்பதவசியம் அங்ஙனமே சுருதியுக்தி யனுபவங்களாலு மிருக்கின்றன ஆனால் ஜாக்கிரத்திலிருந்தயானே சுவப்னத்தை கண்டேனென்று மந்தயானே சுழுத்தியையடைந்தே னென்றும் ஸகலருக்கு மனுபவமிருப்பதால் அவஸ்தைகளுடையவர்கள் ரூ பெயர்களென்று அனுபவங்காணவில்லையென்று சங்கிக்கவேண்டாம் ஏதெனில் ஜாக்கிரமுதலிய ச அவஸ்தைகளையும் பகுத்துப்பாராத அவிவேகிகளுக்கு ஜீவனொருவனென்ற வனுபவந்தோற்றுமேயின்றி பிர்ம்மவித்து வரன்வரீயான் வரிஷ்டனென்ற ச விவேகிகளிடத்தில் யானென்ற அனுபவம் தாரதம்மியமாக பேதித்திருப்பதா லொரேஜீவனென்று சொல்வதும் அவித்தைமுதலிய வுபாதிகளுக் கன்னியர்களாக வுபாதியுடையவர்கள் வேறில்லையென்று சொல்வதும் முக்கியமாகாது பிர்ம்மமே வுபாதியுடையதெனி லப்பொழுது பிர்ம்மமு பாதியற்றதென்றும் ஸம்ஸார ஸாகதுக்கப் புசிப்பற்றதென்றும் நிர்மானித் தச்சுருதிமுதலிய பிரமாணங்களுக்கு மஹாகோபம் நேரிடும் ஆதலால் பிர்ம்மத்திற்கும் அவித்தைமுதலிய வுபாதிகளுக்கும் மத்தியிலு பாதியுடையவர்களான ஜீவர்களை யொப்பவேண்டிய தவசியம்.

சோத்வி.

வாலாக்ரஶததமாகஸ்ய ஶதாகல்பிதஸ்யச । பாகோஜீவஸ்ஸவிஜ்ஞேயஸ்ஸசாநந்த்யாயகல்பதே ॥

என்ற சுருதியிலு ரோமத்தினுயிரம் பாகங்களி லொருபாகத்தி னுகாரம்போல் பரிசசேதமுடையவன் ஜீவனென்று சொன்னபோதிலும் அவனறியத்தக்கவனென்றும் அனந்தமான மோக்ஷத்திற்க் கர்களுகிறானென்றுஞ் சொல்லியிருப்பதால் ஜீவனுக்கு நாசத்தை விதிப்பது சரியல்ல வென்பதற்கு.

உத்தரம்,

யானென்ற அகங்காரி ஜீவன் இவனுக்குப் பிர்ம்மத்தில் நாசத்தைப் பிரமாணங்களால் விதித்தோமே யன்றி மற்றவிடத்தில் விதிக்கவில்லை ஆதலாலிச்சுருதியாலும் ஜீவனுக்குத்பத்தி நாசவசனம் விரோதப்படவில்லை பரிச்சேதமுடைய ஜீவனை அபரிச்சின்னப் பிர்ம்மமாகவறிந்து அங்ஙனமே நித்

தியமு பாவிப்பவருக்கு மோக்ஷாவஸ்தையில ஹங்காரி நசித்துப்போகிற படியால் சீவநாசத்தைச்சொன்னது வுசிதமே ஆனால்தேகமிருக்கும்பொழுதே விதேகமுக்த்தர்களான ஸாங்கியயோகி வரிஷ்டர்களிடத்தில ஹங்காரம் நசிக்கவில்லேயே யெனில் தூலதேகாகங்காரமட்டும் தேகம் தரித்திருக்கிறதற்காக நசிக்கவில்லேயே யன்றி ஸூக்ஷமகாரண துரீயதேகாஹங்காரங்கள் நன்ருக நசித்துவிட்டபடியால் ஸத்தியோவிதேக முக்திவாதத்திற்கொருதடையுமில்லே யென்றறியத்தக்கது.

கேழ்வி.

இத்தூலா கங்காரியான சீவன் நசியாததினு லிவ்வரிஷ்டர் செய்கிற புண்ணியபாவங்களா லிவருக்கும் மறுபிரவிநேரிடுமே ஆதலாலிதுவும் நசித்துத் தூலதேகமும் விழுந்தபின்னே முக்தனெனலாமெனில்.

உத்தரம்.

[illegible] ப்ரஹ்மஸம்ஸ்தோ [illegible] | ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி
அத்ரைவ ஸமவநீயந்தே | ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி | [illegible]
[illegible] ப்ரஹ்ம [illegible] ப்ரஹ்மண: [illegible] இத்யாதிச்ருதி
[illegible] ப்ரஹ்மவித் [illegible]
[illegible] ப்ரஹ்மவரிஷ்ட [illegible] |

சொல்லிய சுருதிகளால் பிர்ம்மவித்துக்கே மறுபிரவியறியப்படாததினுல் வரிஷ்டருக்கு மறுபிரவியில்லே யென்பதிலெவ்வளவும் ஐயமில்லே ஆனலவர் செய்கிற புண்ணியபாவங்களோ வெனில்.

தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் த்
விஷந்த: பாபக்ருத்யாமிதி [illegible]
[illegible] |

அவரது சத்துருக்களிடங்களில் பாவங்களும் மித்திரர்களிடங்களில் புண்ணியங்களும் விநியோகப்படுமென்ற சுருதிப்படி செலவாகிறபடியால் அவருக்கு மறுபிரவியாகக் காரணமொன்றுமில்லே.

கேழ்வி.

மகாவாக்கியங்கள் சம் விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் துரீயனென்று சசீவர்களேயும் புருஷன் பிரகிருதி பிர்ம்மம் சிச்சக்தி யென்ற சதை

தன்னியங்களிலும் லயப்படுத்தி மோக்ஷத்தைக் கொடுக்கின்றன வென்று தெரியவருவதால் அம்மகாவாக்கி யார்த்தங்களையே விஸ்தரிக்கவேண்டுமெ ன்பவருக்கு.

உத்தரம்.

உனது சீவனுக்குப் பிர்ம்மைக்கியமாகியப் பிரளயம் மகாவாக்கியார்த் தஞ்ஞானயோகந்தாலேயே சித்திக்குமென்று நிச்சயித்து முன்னமே சொ ல்லப்பட்டிருப்பதால் அதைச் சிந்திக்கவேண்டியது.

கேழ்வி.

ரிக்வேத மகாவாக்கிய முதல் அதர்வண மகாவாக்கியவரையிலும் கிர மமாக வாக்கியோபதேசஞ் செய்யத்தக்கதென்றும் பிரதிலோமமாக அர்த் தோபதேசஞ் செய்யத்தக்கதென்றும் அதிகாரி ஸம்பந்தம் விஷயம் பிரயோ ஜனமென்று பிரசித்தங்களான ச அனுபந்தங்களில் ச வது அதர்வணவாக் கியம் க வது அனுபந்தமான அதிகாரியின் விஷயமென்று மூங்களால் தீர் மானிக்கப் பட்டிருக்கின்றது அதுசரியல்ல வென்றெனக்குத் தோற்றுகிறது ஏதெனில் நித்தியாநித்திய விவேகம் இகாமுத்திரபலபோக விராகம் சமாதி ஷட்க ஸம்பத்தி முமுக்ஷுத்துவமென்று பிரசித்தங்களான ச ஸாதனங் களிலும் நிர்க்குண ஸச்சிதானந்த லக்ஷணங்களுடைய பரப்பிர்ம்மமொன் றே நித்தியவஸ்துவென்று ஸாமான்னியமாக ஞானமுதித்ததேயன்றி யாத் மாவுக்கும் பிர்ம்மத்திற்கு மைக்கியமே வாஸ்தவமென்ற ஞானமுதிக்கவிலை யே அதர்வண மகாவாக்கியத்திலோ வெனி லிவ்வாத்மா பிர்ம்மமென் றிரண் டுகளுக்கு மைக்கிய மறியப்படுகிறது இங்ஙனமிருக்க இவ்வாக்கிய மதிகாரி விஷயமென் றெங்ஙனஞ் சொல்லலாம்.

உத்தரம்,

ஜகத்காரணமான ஸகுணேசுவரனே நித்தியனென்றறிந்தவன் மந் தாதிகாரியென்றும் அவ்வீசுவரனுக் கந்தரியாமியும் சீவகாரணமுமான நிர்க் குணபுருஷனே நித்தியனென்றறிந்தவன் மத்தியமாதிகாரியென்றும் அந்த நிர்க்குணபுருஷனு மாத்மாவுமம் சாம்சிகளாத லாலிருவருமேகமென்ற நித் தியஞ் ஞானமுடைய வனுத்தமாதிகாரியென்றும் பிரசித்தமாயிருப்பதா லு த்தமாதிகாரியை யபேக்ஷித்து அதர்வணவாக்கியம் அதிகாரிபரமென்று சொ ன்னது நியாயமே ஆனாலிவ்வுத்தமாதிகாரம் சித்திக்கிறதற் கிவ்வாத்மபுரு ஷைக்கியச் சிரவணமொன்றே போதுமென்றெண்ணக்கூடாது இச்சிரவ

ணமான பின்னிவ்வைக்கியம் சித்திக்க முக்கியச் சாதனமான ஹடராஜயோ காப்பியாஸத்தைத் தினந்தோரும் நியமத்துடன்செய்யவேண்டியதவச்சியம்.

கேழ்வி.

சிரவணமானபின் மனனமுமதற்குப் பின் நிதித்தியாஸனமும் செய்யத்தக்கதாக வுபநிஷத்து முதலிய ஸகலப்பிரமாணங்களிலும் தீர்மானித்திருக்க வதைச்சொல்லாமல் ஹடராஜ்யோகத்தை விதித்த காரணமெதென்பதற்கு.

உத்தரம்.

இவ்வதர்வண வாக்கியத்திற்கு மேலான ஸாமவாக்கியார்த்தச் சிரவணமானபின் செய்யவேண்டியதா மனனமேயின்றி யிதுதெரிசனவாக்கியமாதலால் கவுணகுருவி னுபதேசத்தா லிவ்வைக்கியத்தை யறிந்தபின் ஷண்முகி முத்திராபந்தத்துடன் ஹடராஜ யோகாப்பியாசத்தை நித்தியஞ் செய்யவேண்டியதே முக்கியம் அடயோகமென்பது விதிப்படிப் பிராணுயாம மாத்திரஞ்செய்வது இராஜயோகமென்பது புருவங்களினிடையில் ஜியோதிர்மயமான ஆத்மாவை தீபம்போல் தியானிப்பது அடராஜ யோகமென்பது சொல்லிய விரண்டையும் ஸமகாலத்தில் செய்வது இங்ஙனம் அடராஜ ஸமுச்சயமன்றி கேவலஅடயோகத்தைச் செய்தால் காயசித்திமுதலான சித்திவிசேஷஙகள் சித்திக்குமேயன்றி மோக்ஷப்பயன் சித்தியாது இதன்றிகேவலராஜயோகத்தைச் செய்தால் தீபாகாரம முதலிய நாநாகாரங்களுடைய ஜோதியின் ஜெரிசனத்தால் ஸாமான்னிய சித்தசுத்திநேரிடுமே யின்றி யாத்மப் பிர்ம்மைக்கியஞ் சித்தியாது ஆதலால் விசுவன் தைஜஸன் பிராஞ்ஞனென்ற முச்சீவர்களுக்கு மேலான துரீயகூடஸ்த ஆத்மாவுக்கும் ஹிரண்ணிய கெர்ப்பன் ஸூத்திராத்மா அந்தரியாமியென்ற மூவீசர்களுக்கு மேலான துரீயநிர்குண பிர்ம்மத்திற்கும் அடராஜ ஸமுச்சயயோகத்தா லைக்கியத்தையடைவதே மோக்ஷஸாதன மென்றறியத்தக்கது.

கேழ்வி.

இவ்வதர்வண மகாவாக்கியம் அதிகாரிபரமென்று முன்சொன்னதற்கன்னியதாவாக விப்பொழுது மோக்ஷஸாதனமென்று சொன்னது சரியல்ல இதினுலேயே மோக்ஷம்சித்திக்கும் பக்ஷத்தில் மேலானஸாமவாக்கியமுதலானதுக ளனுவச்சியகம் களாகும் அங்ஙனமாகிறதோ நியாயமல்ல இதுநிர்க்கப் பிரகிருதஅடராஜயோகத்தில் தியானத்தால்தெரிசிக்கப்பட்ட ஆத்மாவுக்குப்பிராணுயாமத்தால் பிர்ம்மத்துடனைக்கியஞ் சித்தித்தது அவ்வைக்கியமும்

தியானத்தாலேயே சித்தித்தாலப்பொழுது ஜலத்துடன் ஜலம்போலவும் பாலுடன் பால்போலவும் எண்ணெயுடன் எண்ணெய்போலவும் பிர்ம்மத்துடனுத்மா நன்ருக ஐக்கியத்தையடையக்கூடும் அகண்டப் பிர்ம்மத்தியானமன்றி சித்தித்த ஐக்கியம் பாலுடன் ஜலம்போலவும் ஜலத்துட னெண்ணெய்போலவுமாகுமாதலால் துவைதவிருத்தியுடைய இவ்வாத்மப் பிர்ம்மைக்கியம் மோக்ஷஸாதனமென்று சொன்னது மிகத்தப் பென்பதற்கு.

உத்தரம்.

உளது இவ்வகண்டப் பிர்ம்மைக்கிய காலத்திலும் திருஷ்டாதெரிசனம் திருச்சியமென்றத் திருபுடிபேதமிருப்பதா லித்தெரிசனமும் ஸம்யக் தெரிசனமாகாது ஆயினுமிது மோக்ஷசாதனமென்று சொன்னது தப்பல்ல வதெனில் கிரமமுக்த்தியென்றும் ஜீவன்முக்த்தியென்றும் விதேகமுக்த்தியென்றும் முவ்விதமுக்த்திப் பிரசித்தமாயிருப்பதாலிதில் பிர்ம்மலோகக் கிரமமாகக் கிடைக்கத்தக்க னமுக்த்தி யிவ்வாத்மப் பிர்ம்மைக்கிய தெரிசிக்குச் சித்திப்பதில் சந்தேகமில்லை நாநாவிருத்தியுடையவர்களுக்கே மறு ன்மமும் புண்ணியலோகத்திற்குப் போனுலும் புனராவிருத்தியு முண்டாகுமேயின்றி துவைதவிருத்தியுடையவர்களுக் கவையுண்டாகாதுகள் தைத்திரீயோபநிஷத்தில் துவைதப்பார்வை யுடையவனுக்குப் பயம்சொல்லப்பட்டதே யெனில் பிர்ம்மலோகத்தில் தற்காலசித்தமான குருசிஷ்யாதிபேதததால் பயமுண்டாகும் ஆயினுமது புனராவிருததிப் பயததைக்கொடாது இவ்விடத்தில் ஜீவன முக்த்தர்களுக்குப் பிராதிபாஸிகமானத்து வைதத்தால் பிராரப்த்த சுகதுக்கானுபவ ரூபங்களான பயங்களுண்டாகவில்லையோ புனர்ஜன்மம் சித்திப்பதே பயமென்று சுருதியின் கருத்தேயின்றி பிராரப்தத்தாலுண்டாகிற துன்பம் பயமல்லவென்று சகலசாஸ்திரங்களாலும் நிச்சயிக்கப்பட்டதே.

கேழ்வி.

இம்மகா வாக்கியத்தில் சொல்லப்பட்ட ஆத்மாஜீவ லக்ஷியார்த்தமாகவும் பிர்ம்மமீசலக்ஷியார்த்தமாகவு மிருப்பதால் ஜலத்திற்கும் ஜலத்திற்கும் போல் நன்ருகவைக்கியம் சித்திக்கலாமே இரண்டும் வாச்சியார்த்தங்களாயிருந்தாலல்லவா ஸாயுஜ்யமுக்த்தியில் பகவன்மூர்த்தியி லைக்கியம்போல் ஜலமு மெண்ணெயுமென்ற வுபமைப்படியைக் கியமௌபசாரிகமாக நேரிடும் அடராஜயோகத்தில கண்டப் பிர்ம்மத்தியானத்தைச்செய்ய முடியாமையால் சாமான்னிய ஐக்கியமாகுமே யின்றி முக்கிய ஐக்கியமாகாதென்று சொன்னதும் சரியல்ல திருஷ்டாமுதலிய திருபுடிபேதமிருப்பதா லய்யோ

காப்பியாஸகாலத்திலும் சித்தவிருத்தி நசிக்கவில்லை சித்தவிருத்தியாலேயே ஸகலத்தையும் தியானிக்கத் தக்கது ஆதலா லிம்மகாவாக்கியத்தாலேயே ஆத்மப் பிர்ம்மைக்கியம் முக்கியமாகக் கூடும்.

உத்தரம்.

இதில் சித்தவிருத்தி நசியாமலிருந்தபோதிலும் பிராணாயாமத்தால் கட்டப்பட்டதினால் சித்தம் அகண்டப் பிர்ம்மத்தைத் தியானிக்கத் திறமையுடையதாகக் காரணமில்லை சுருதியும் மனதுக்குப் பிராணன் கட்டுஸ்தானமென்று சொல்கின்றது உலகத்திலும் கட்டப்பட்ட மனிதன் சாகாமலிருந்து மொருதொழிலையும் செய்யவல்லவனாகவில்லை ஆத்மத்தியானமோவெனில் பிராணாயாமத்திற்கு முன்னமேசெய்த படியால் சித்தித்தது பிர்ம்மத்தியானத்தையும் முன்னமேசெய்யக்கூடாதோ வெனில் இவ்வாக்கியத்திற்கு மேலான ஸாமவாக்கியத்தால் பிர்ம்மத்தின் சிரவணமனனங்களானபின் யஜுர்வாக்கியத்தால் நிதித்தியாஸனத்தைச் செய்யும் பொழுதல்லவா அத்தியானம சித்திக்கின்றது பிராணாயாமமும் தன்னால் சித்திக்கின்றது ஆதலா லிவ்வாக்கியத்தி லகண்டப் பிர்ம்மாத்மைக்கியத் தியானமில்லாததினால் முக்கியமான ஐக்கியம் சித்தியாது இவ்வாத்மாவும் பிர்ம்மமும் நிர்குணங்களாதலால் ஜீவேசுவர லக்ஷியார்த்தங்களாயினு முபயைக்கியத் தியானஞ்செய்ய முடியாமையினாலேயே நன்றாக ஐக்கியம் சித்திக்கமார்க்கமில்லை ஆனாலிவ்வாக்கிய லக்ஷியார்த்தங்களை யடைந்தவனுக்கும் துவைதவிருத்தியிருப்பதால் ஸகுணமூர்த்தியினு பாஸகனுக்குப்போல் ஸாயுஜ்யமுக்தியே கிடைக்கத்தக்கதாயிருப்பதா லிவ்வாக்கியத்தில் விசேஷமில்லை யெனக்கூடாது ஸகுண ஸாயுஜ்ய முக்தனுக்குப் புனராவிருத்தியும் நிர்குணஸாயுஜ்ய முக்தனுக்க புனராவிருத்தியும் பிரசித்தமல்லவா இவ்வாக்கியமோ நிர்க்குணாத்மப் பிர்ம்மைக்கிய விஷயமென்று சொன்னோம் ஆதலால் ஸகுணோ பாஸனையைக்காட்டிலு மிவ்வாக்கியார்த்தோ பாஸனையில் மிகவிசேஷ மிருக்கின்றதென்றறிய வேண்டியது.

கேள்வி,

சாந்தோக்கிய வுபநிஷத்தில் கண்ணுக்குள் காணப்படுகின்ற புருஷனாத்மாவென்று மிவனே அமிருதமும் அபயமுமான பிர்ம்மமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது மாண்டூக்கி யோபநிஷத்தில் கண்ணுக்குள் விசுவனென்ற ஜீவன் வசிக்கிறதாகச் சொல்லப்படுகிறது தசோபநிஷத்துகளில் மாண்டூக்கியமே சிலாக்கியமானதென்று பிரசித்தமாயிருப்பதா லிதற்கு விரோதமன்றி சாந்தோக்கியத்தை வியாக்கியானிப்பது வுசிதமாதலாலும் கண்

ணுக்குள் காணப்பட்ட ஆத்மா ஜீவனென்றே நிர்மாணிக்கவேண்டும் இங்ஙனமாகும்பொழுது இவ்வாத்மா பிர்ம்மமென்ற மகாவாக்கியம் ஜீவனையே பிர்ம்மமென்று வுபசாரமாகச் சொன்ன தென்றறியத் தக்கது.

உத்தரம்.

துரீயவஸ்துவை வெகுதரஞ் சொன்னதினால் மற்றதுகளைக் காட்டிலும் மாண்டூக்கியம் சிலாக்கிய மாயிற்றேயன்றி அதில்சொல்லிய சகலப் பொருள்களும சிலாக்கியங்களென் றெண்ணக்கூடாது ஆயினுமாத்மபத வாச்சியரர்த்தனுன சீவனு மிலக்ஷியார்த்தனுன ஆத்மாவும் கண்ணுக்குள் பிம்பப் பிரதிபிம்பங்களாகவே நித்தியமிருப்பதா லிவ்வாத்மாவுக்குப் பிர்ம்மத்துடனைக் கியத்தைச்சொன்னது வுபசாரமாகாது இங்ஙனமே சாந்தோக்கியத்தில் இரதய புண்டரீகத்திலு பாஸிக்கத்தக்கன தகராத்மா சொல்லப்பட்டது மாண்டூக்கியத்திலி ஸ்தானத்தில் பிராஞ்ஞனென்ற சீவன்சொல்லப்பட்டான் இவ்விடத்திலும் முன்சொல்லியபடியே யறியத்தக்கது பிராஞ்ஞனென்ற சீவனே பிர்ம்மமென்று ஷோஷோப்த்தப் பிர்ம்மவாதி வெகுவிடங்களில் நிர்மாணித்தது மாண்டூக்கியத்திற் கிதரங்களான வுபநிஷத்துகளுக்குச் சம்மதமாமென்று சங்கைகூடாது பிராஞ்ஞனுக்கு மேலான பரஞ்சோதியை யடைந்து ஸ்வரூபத்துடன் சேர்ந்தவனுத்தம புருஷனென்று சாந்தோக்கியத்திலுஞ் சொல்லப்பட்டிருககின்ற தல்லவா ஆதலால் குற்றமில்லை.

கேழ்வி.

வியாச ஸூத்திரத்தில் சீவோபாசனம் முக்கியப் பிராணோபாசனம் பரமாத்மோ பாசனமென்று மூவ்வுபாசனைகளைச் சொன்னதில் பரமாத்மோபாசனையை யஜுர்வாக்கியத்தில் சொல்லியிருப்பதாலும் முக்கிய பிராணோபாசனையை ஆத்மப் பிர்ம்மைக்கி யார்த்தமான அடராஜயோகத்தில் செய்யத் தக்கதாயிருப்பதாலு மிவ்வாத்மாவுபாசிக்கத்தக்கன சீவனென்றே நிச்சயிக்கவேண்டும்.

உத்தரம்.

உரோமத்தி லாயிரத்திலொருபாகம் போலாகிருதியுடையவன் சீவனென்று மவனை பரமாத்மாவுடனே சனுக அறியவேண்டுமென்றும் மற்றொருசுருதியில்சொல்லியிருப்பதாலுமிச்சீவனிலக்ஷியார்த்தமென்று முன்னமே நாம்சொல்லியிருப்பதா லுமைக்கியத்திற்கு விரோதமில்லை நியாதாவென்றும் நியேயனென்றுஞ் சொல்லப்படுகின்ற பிம்பப்பிரதி பிம்பாத்மாக்களில் பிம்பரூபியானந்நியேய ஆத்மாவே பிர்ம்மத்துடனைக்கியத்தை யடையக்கூடி

யவனுதலால் தியாதாவென்ற பிரதிபிம்பசீவனே யிவ்வாக்கியத்தி லாத்மசப்தத் தால் சொன்னதாக வெண்ணக்கூடாது ஒருவேளை யெவனுவ தெண்ணினு லிலக்ஷணையை யடுக்கவேண்டியது அவசியம்.

இனி நம்மாலேயே செய்யப்பட்ட யோகசாரமென்றப் பிரபந்தத்தின் கூ வதத்தியாயத்தில் சொல்லியபடி சிச்சட்விபரங்களைச் சுருக்கமாக நிரூபிக்கிறதற்கு ஆத்மானுத்மபேதம் ரூபிக்கப்படுகின்றது.

விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் துரீயன் பிரத்தியகாத்மா பரமாத்மா கேவலாத்மா அரூபப்பிர்ம்மமென் றிங்ஙனம் வியஷ்டிசித்துக்கள் அ ஜாகிரம் சொப்னம் சுழுத்தி துரீயமென்ற துவைத்விருத்தி ஸாக்ஷிவிருத்தி அகண்டாகார விருத்தி அகண்டைகரசம் தூலதேகமென் றிங்ஙனம் வியஷ்டி சடங்கள் அ விராட்டு ஸூத்திராத்மா அந்தரியாமி புருஷன் பிரகிருதி சித்ரூபப்பிர்ம்மம் சிச்சக்தி அரூபப் பிர்ம்மமென் றிங்ஙனம் சமஷ்டிசித்துகள் அ தூலவிக்ஷேபம் ஸூக்ஷ்மவிக்ஷேபம் ஆவரணம் மாயை அகங்காரம் மகத்து அவ்வியக்தம் சதுர்முகப் பிர்ம்மாவின் தூலதேகமென் றிங்ஙனம் சமஷ்டி சடங்கள் அ இவ்விதங்களான யசு சிததுகளையும் யசுஜடங்களையும் குருமுகமாயறிந்து சமாதிப் பழக்கததால் பிரிதது ஸ்வானுபவத்தைப் பெற்றவரோ சத்தியோ விதேகமுக்தத ரெனப்படுவார்.

கேழ்வி.

அரூபப் பிர்ம்மமொனறே சித்தெனறும் மற்றவையெல்லாம் சடங்களெனறும் சகலசாஸ்திர சம்மதமா யிருப்பதால் சிததுகளநேகமெனறு சொனனது சரியல்ல இதுவிர்க்க வியஷ்டி ஸமஷ்டிதூல தேகங்களைய ரூபப்பிர்ம்மங்களின் சடங்களாகச் சொன்னதும் சரியல்ல ஏதெனில் விசுவனெனற சீவனுக்கும் விராட்டெனற ஈசனுக்கு மல்லவா அச்சடங்கள் பிரசிததம் அரூபப் பிர்ம்மததிற்கும் ஜடசம்பந்தமிருக்குமாகி லப்பொழுதாகாசம்போல் பிர்ம்மம் அஸங்கமெனறு சொல்லிய சுருதிகளெல்லாம் வீணுகும் ஆதலால் முடிவான வவ்வரூபப் பிர்ம்மம் சடசம்பந்த மற்றதென்றே தீர்மானிக்கவேண்டியது.

உத்தரம்,

முமுக்ஷுவான ஜீவன் சாங்கியயோக பெலத்தால் விசுவன்முதலிய எ சித்துக்களையும் விராட்டுமுதலிய எ சிததுகளிலும் மேலுக்குமேல் லயிப்பித்தபொழுது யசு ஜடங்களும் நசிக்கும் பின்விசுவனபிமானித் திருந்த தூல

தேகமும் விராட்டபிமானித்திருந்த தூலதேகமும் வியஷ்டி சமஷ்டியரூபப் பிர்ம்மங்களுக்கே சொல்லப்படும் பின்விதேகமோக்ஷா தீதாவஸ்தையில் மற்ற ௬ அம்சங்களும் நசித்து நிராகாரமானவ ரூபப்பிர்ம்மமொன்றே சேஷிக்கும் ஆதலால் அத்துவைதச்சுருதிகளுக்கும் அஸங்கச்சுருதிகளுக்கும் விரோதமில்லை ஆயினும் விசுவன்முதலிய வியஷ்டிகளுக்கு பாஸகத்துவமும் விராட்முதலிய ஸமஷ்டிகளுக்கு பாஸ்யத்துவமும் தடையற்றுச் சித்தித்திருப்பதா லவ்விருவகைக்கார்களையும் சடங்களென்று சொல்வதுமிகத்தப்பு.

கேழ்வி.

ஸமாதியோகங்களென்ற இவ்வுபாசனைகளை யவச்சியஞ்செய்யவேண்டுமென்று தீர்மானிப்பது சரியல்ல ஏனெனில் அரூபப்பிர்ம்மமொன்றை நீக்கி மற்றதெல்லாம் ஸகுணங்களாகவே முடிந்ததுகளல்லவா ஸகுணோபாஸனைகளோ அனேகவிதங்களாயினும் காம்மியப்பயன்களைக் கொடுக்குமேயின்றி மோக்ஷத்திற்குப் யோகப்பட்டவையல்லவென்று ஸர்வசாஸ்திர ஸம்மதம் மோக்ஷார்த்தமாக வரூபப்பிர்ம்மத்தை விசாரித்தறியும்படி யுபநிஷத்துகளின் கருத்தும் வசனங்களும் வெகுவாகக்காணுகின்றனவே யின்றி பேதவாதத்திற் காஸ்பதமான ஸகுணோபாஸனைகளை யாவச்சியகங்களாக வொருவிடத்திலுஞ் சொல்லவில்லை உபாஸகனைப் பசுவென்றெருச் சுருதிநிந்தித்திருக்கவும் காணுகின்றது ஆதலால் ஸத்தியோ முமுக்ஷுவாகிய வுத்தமாதிகாரிக்கிச் சகுணப்பிர்ம்ம சிச்சடவிபாகங்களை யறிந்து கழிக்கும்படி யேவல்செய்வது சரியல்ல.

உத்தரம்.

பிர்ம்மா விஷ்ணு ருத்திரர் என்றமூர்த்திகளின் தியானதிகள் மட்டும் ஸகுணோபாசனைகளாமேயின்றி விராட் ஸூத்திராத்மா அந்தரியாமியென்ற ஈசர்கள் ஸகுணப்பிர்ம்மங்களாயினும் அவர்களினு பாசனைகள் சகுணோபாசனைகளாகாதுகள் ஏனெனில் நிஷ்காமர்களான முமுக்ஷுக்களாலுபாஸிக்கப்படுவதாலும் மூர்த்தியற்ற சிதம்சங்களாயிருப்பதாலும் நிர்க்குணஸ்வரூபிகளென்றே சொல்லத்தக்கவர் களல்லவா இவர்களே இங்ஙனம் நிர்க்குணர்களாயிருக்கும்பொழுது இவர்களுக்கு மேலான மற்றபரமபுருஷன் முதலிய சைதன்னியங்களையும் ஸகுணப்பிர்ம்மங்களென்பது நியாயமா ஆனால் முக்குணங்களும் காரியகாரணபேதத்தால் ௨ விதங்களாகிறதில் காரியமுக்குணங்களுடையவர்கள் விராட்முதலிய ௩ ஈசர்களென்றும் காரணமுக்குணங்களுடையவர்கள் பரமபுருஷன் முதலிய மூன்றுகளென்றும்

சொல்லக்கூடும் ஆயினு மிம்மூன்று சைதன்னியங்களும் சகுண நிர்க்குணங்களென்றும், ௭-வதாகிய சிச்சக்திப் பிரம்மம் முக்கிய நிர்க்குணமென்றும், ௮-வதாகிய அரூபப் பிரம்மம் நிர்க்குணாதீதமென்றும் சொல்லக்கூடுமேயின்றி ஸகுணமென்று துச்சமா யுபேக்ஷிப்பது எவ்வளவும் சரியல்ல. ஸகுணோபாஸகரைப் பசுவென்றுச் சுருதி நிந்தித்ததோவெனில் மூர்த்திகளி னுபாஸனா விஷயமாதலால் குற்றமில்லை, இங்ஙனம் விசுவன் முதலிய வாச்சியார்த்த மூச்சீவர்களுக்கு லயஸ்தானங்களான விராட்டு முதலிய மூவீசர்களையும் ஆத்மா முதலிய இலக்ஷியார்த்த மூச்சீவர்களுக்கு லயஸ்தானங்களான புருஷன் முதலிய முப்பிரம்மங்களையும் மேலுக்குமேல் கிரமமாக ஸமாதியோகங்களாகிய வுபாஸனைகளால் நன்று யனுபவியாமல் ஸகுணங்களென்ற குற்றங்களை வாக்கினால் புலம்பிக்கொண்டு அரூபப் பிரம்மமொன்றே ஸத்தியமென்ற வறிவுமாத்திரத்தால் நாங்கள் தன்னியர்களென்று யதேச்சையாக ஸஞ்சரித்துக்கொண்டு வுலகத்தையுங் கெடுக்கின்ற சுத்தாத்துவைதிகளும் இதைப் பார்ப்பார்களாகில் தன்னியர்களாவார்களென்று அறியவேண்டியது ஆனாலவர்கள் இச்சாஸ்திரத்தைப் பார்த்தபோதிலும் தங்களுடைய கொள்கையை விடார்களென்றெண்ணவேண்டாம் ஏனெனில் இது சகலச் சுருதி யுக்தி யனுபவங்களுக்கும் ஒற்றிருக்கின்றதல்லவா ஆதலால் இது ஸகல வுலகத்தாருக்கும் க்ஷேமத்தையே செய்யுமென்று நிச்சயம்.

கேள்வி.

முன்சொல்லிய சிச்சடங்களை யொன்றொன்றாகப் பிரித்து அனுபவிக்க முக்கியச் சாதனங்களான ஸமாதியோகாப்பியாஸங்களைச் செய்யவேண்டிய தவச்சியமாகக் காணுகின்றது ஸமாதிகளோ ஸரஸ்வதீரகஸ்ய வுபநிஷத்தில் திருச்சியானுவித்தம், சப்தானுவித்தம், நிர்விகல்ப்பம், நிஸ்ஸங்கல்ப்பம், நிர்விருத்திகம், நிர்வாஸனமென்று ௬-விதங்களே சொல்லப்படுகின்றன. அங்ஙனமிருக்க இவ்வெட்டுச் சிச்சடங்களையும் பிரிக்கச் சமாதிகள் கணக்காக விலை யென்பதற்கு

உத்தரம்.

தெரிசனம், சிரவணம், மனனம், நிதித்தியாஸனம், நிர்விகல்ப்பமுதலிய ௪. இவ்வெட்டுச் சாதனங்களுக்கும் விஷயப்பட்ட ஆத்மா புருஷன் பிரகிருதி பிரத்தியகாத்மா பரமாத்மா பரப்பிரம்மம் கேவலாத்மா சிச்சக்தி யென்ற இவ்வெட்டுகளும் கிரமமாய் அனுபவிக்கப்படும்பொழுது சொல்லிய ௧௫-சித்துகளும் ௧௬-ஜடங்களும் நசித்து நிர்க்குணாதீத வரூபப் பிரம்மமாக ஜீவன் சேஷிப்பான். திருச்சியானுவித்த முதலிய ௬-ஸமாதிகளுக்குப் பிர

கிருதி முதலிய சுூம் விஷயப்பட்டதுகளென்றறியத்தக்கது இவ்வர்த்தங்களைத் திராவிட வசனங்களாலேயே செய்யப்பட்ட ஸ்ரீராமகீதா வியாக்கியானத்திலும் யோகஸாரமென்ற ஸம்ஸ்கிருதப் பிரபந்தத்திலும் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் சுருக்கிச் சொல்லலாயிற்று.

கேழ்வி.

இச்சாஸ்திரம் ஸாங்கியயோக ஸமுச்சயவாதத்திற்கு அனுகூலமாய் இருக்கின்றது. உலகத்தில் பிரசித்தர்களான சுத்தாத்துவைதிகளோ கேவல ஸாங்கியர்களாகி ஞானமாத்திரத்தால் முக்தி சித்திக்குமென்றும் அந்த ஞானத்திற்குக் கருமத்தாலாவது பக்தியாலாவது யோகத்தாலாவது ஸமுச்சயங் கூடாதென்றுந் திடமாகச் சொல்லுகின்றனர் அவ்வ ஸமுச்சயவாதிகளுக்கு இந்திரியமனப் பிராண விருத்திகள் நசியாமல் உலக வியாபாரங்களிற் பற்றியிருப்பதால் அம்மதத்தைவிட்டு இச்சாங்கியயோக ஸமுச்சய மதத்தை யடுப்போமெனில் இதிலுமதிகமானச் சிரமமிருக்கின்றதேயின்றி கோருகின்ற பயனுக்கு இடங்காணவில்லை ஆதலால் உலக வியாபாரங்களற்று மலைப்பாம்புபோல அசைவற்றுப் பூமியில் எப்பொழுது முடல் கிடக்கும்படியான கேவல யோகமென்ற மதமே மிகச் சிலாக்கியமென்றெண்ணுகின்றேன் ஆதலால் அதின் விபரத்தை நன்றாகப் பிரமாணத்துடன் ரூபிக்கவேண்டும்.

உத்தரம்.

கேவலயோகமென்பதும் பிரமாத்மைக்கியஞ்ஞானயோகமே அது ஹடயோகமுமல்ல இராஜயோகமுமல்ல அது வராஹோபநிஷத்து முதலிய வெகு வுபநிஷத்துகளில் சொல்லப்பட்டுமிருக்கின்றது ஆயினும் அது ஜீவன் முக்தியில் முடிந்ததேயின்றி ஸத்தியோவிதேக முக்தியைக் கொடாதேதெனில் அக்கேவல யோகாப்பியாஸத்தால் இந்திரியாதி தத்துவங்கள் நசியாமல் அவ்விருத்திகள் மாத்திரம் நசிப்பதால் உலக வியாபாரங்களற்றுச் சகலப் பாமரர்களும் சிலாகிக்கும்படி நேரிடுமேயின்றி தத்துவங்கள் நசியாததினால் வித்வான்கள் சிலாகிக்கும்படி நேரிடாது. இவ்வர்த்தங்களும் யோகஸாரத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டதுகளே. ஆதலால் சகலத்திலும் அசமுச்சயப பக்ஷத்தைத்தள்ளி ஸாங்கியயோக சமுச்சயபக்ஷத்தையே சத்தியோமுமுக்ஷுகளடுக்க வேண்டியது. ஆனாலிந்திரியாதி தத்துவங்கள் நசித்தபின்னவைகளின் விருத்திகள் நசியாமலிருக்குமாவென்ற சங்கை வேண்டாம். பெருங்காயம் கஸ்தூரிமுதலியத் திரவியங்கள் முழுவதும் செலவாயும் அவ்வதிஷ்டான சொப்புகளிலவ்வாசனைகள் நசியாமல் சொல்பகாலமிருப்பது போலாகும். ஆதலால் சாங்கியயோகியே சகலர்களிலுமுயர்ந்தவரெனறறியத்தக்கது.

கேழ்வி.

ஆனால் சாங்கியயோகி யிடத்திலிந்திரியாதிவிருத்திகள் நசியாமலிருப்பதால் மறுஜென்மத்தைக் கொடுக்கும். வறுத்தவிதைபோல் ஸ்ருபநாசமாய் விட்டதினால் மறுஜென்மம் வராதெனிலப்பொழுது ஜீவன் முக்தியாயிற்றேயின்றி விதேகமுக்தியாகவில்லை. ஸ்ரூபமனோநாசம் ஜீவன்முக்தியென்றும் அரூபமனோநாசம் விதேகமுக்தியென்றுமல்லவா சுருதி முதலிய ஸகலப் பிரமாணங்களிலும் பிரசித்தம். ஆதலால் சாங்கியயோகியே பெரியோரென்பது சரியல்ல.

உத்தரம்

மனோவிருத்திக்குச் சரூபநாசஞ் சித்தித்த ஸாங்கியயோகிக்கு மனத்தத்துவத்தின் அரூபநாசம் சித்தித்திருப்பதால் அவர் விதேக முக்தரென்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை. கேவல யோகிக்கு மனோவிருத்தியின் அரூபநாசம் சித்தித்தபோதிலும் மனத்தத்துவத்தின் அரூபநாசம் சித்தியாததினால் அவர் ஜீவன்முக்தரே. விருத்தி நாசத்தைக்காட்டிலும் தத்துவநாசம் பெரிதல்லவா ஆதலால் ஸாங்கிய யோகியே பெரியோரென்று நிச்சயம் இங்ஙனம் சுத்தாத்துவைதிகளும் விசிஷ்டாத்துவைதிகளும் இச்சடங்களை விவரித்துச் சொல்லாமல் இருந்தபோதிலும் பரமார்த்த தெசையில் சுத்தாத்துவைதிகள் அரூபப் பிர்ம்மத்தையும் வியவஹாரதெசையில் விசிஷ்டாத்துவைதிகள் ஜீவபர பேதத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதால் அவ்விருவர்களும் ஏக தேசாம் சத்தில் இச் சாஸ்திரத்திற் கொற்றவர்களென்றே நிச்சயிக்கவேண்டியது

இங்ஙனம் அப்பயதீக்ஷிதரால் செய்யப்பட்ட பாலபோதினியில் ௨-வது ஜீவோத்பத்திப் பிரகரணம் முற்றிற்று.

௩-வது ஸர்வஸாரப் பிரகரணம்.

இனி ௩௩-வது ஸர்வஸாரோபநிஷத்து முழுவதையும் வியாக்கியானித்து ஸகலருக்கும் பரமார்த்த ஞானானுபவஞ் சித்திக்கிறதற்கு ௩-வது ஸர்வஸாரப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

கிம்பந்த⁴: | கோமோக்ஷ: | காऽவித்³யா | காவித்³யா | ஜாக்³ரத்ஸ்வப்னஸுஷுப்திதுரீயம் ச கத²ம் | அன்னமயப்ராணமய மனோமய விஜ்ஞானமயானந்த³மயகோஶா: கத²ம் | கர்தா | ஜீவ: | பஞ்சவர்க³: | க்ஷேத்ரஜ்ஞ: | ஸாக்ஷீ | கூடஸ்த²: | அந்தர்யாமீ | ப்ரத்யகா³த்மா | பராத்மா | மாயா சேதி கத²ம் ||

இதின் பொருள். எங்ஙனம் பந்தம், எங்ஙனம் மோக்ஷம், எது அவி த்தை, எது வித்தை, ஜாக்கிரம் சுவப்னம் சுழுத்தி துரீயமும் எங்ஙனம் அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயமென்ற கோசங்கள் எங்ஙனம், கர்த்தா க, ஜீவன் உ, பஞ்சவர்க்கங்கள் ௩, க்ஷேத்திரஞ்ஞன் ௪, ஸாக்ஷி ரு, கூடஸ்தன் ௬, அந்தரியாமி எ, இவைகள் எங்ஙனம், பிரத்திய காத்மா, பரமாத்மா, மாயை இவைகள் எங்ஙனம்.

அநாத்மநோ தேஹாதீநாத்மத்வேநாபிமந்யதே ததாத்மநோ பந்த: । அஹம் ப்ரஹ்மாஸ்மீத்யபரோக்ஷஜ்ஞாநேந தேஹாத்யபிமாநநிவ்ருத்திஸ்ததாத்மநோ மோக்ஷ: । யா ஹ்யாத்மநோ(அ)ஜ்ஞாநகாரணச்சாயா ஸைவாவித்யா । யா சாத்மந: ப்ரஜ்ஞாநகாரணச்சாயா ஸைவ வித்யேதி । ஸோ(அ)யமாத்மாத்மநாநுக்ருஹீதாஞ்சப்தாதிவிஷயாந் ஸ்தூலாந் யதோபலபதே ததாத்மநோ ஜாகரணம் ॥

இதின் பொருள். அனாத்மாக்களான தேகாதிகளை யெப்பொழுது ஆத்மாக்களாக அபிமானிக்கிறானோ அப்பொழுது ஆத்மாவுக்குப் பந்தம். யான் பிரம்மமாகிறேனென்று அபரோக்ஷ ஞானத்தால் தேகாதி யபிமானத்தை யெப்பொழுது விடுகிறானோ அப்பொழுது ஆத்மாவுக்கு மோக்ஷம் எது ஆத்மாவின் அஞ்ஞானகாரணமான சாயையோ அதே அவித்தை எது ஆத்மாவின் பிரஞ்ஞானகாரணமான சாயையோ அதே வித்தை, அந்த இந்த ஆத்மா தன்னாலனுக்கிரஹிக்கப்பட்ட சப்தாதி ஸ்தூல விஷயங்களை யெப்பொழுது அடைகிறானோ அப்பொழுது ஆத்மாவுக்கு ஜாக்கிராவஸ்தை.

தத்வாஸநாஸஹிதைஶ்சதுர்தஶகரணை: ஶப்தாத்யபாவே(அ)பி வாஸநாமயாஞ்சப்தாதீந்யதோபலபதே ததாத்மந: ஸ்வப்நம் । சதுர்தஶகரணோபரமாத்விஶேஷவிஜ்ஞாநாபாவாத்யதா ஶப்தாதீந்நோபலபதே ததாத்மந: ஸுஷுப்தம் । அவஸ்தாத்ரயபாவாபாவஸாக்ஷீ ஸ்வயம்பாவாபாவரஹிதம் நைரந்தர்யம் சைதந்யம் யதா ததா துரீயம் சைதந்யமித்யுச்யதே । அந்ந

அவ்வாஸனைகளுடன்கூடிய ௧௪-கரணங்களால் சப்தாதிகள் இல்லாமலிருந்தபோதிலும் வாஸனாமயங்களான சப்தாதிகளை யெப்பொழுதடைகி

றானோ அப்பொழுது ஆத்மாவுக்கு சுவப்னம். ௧௪-கரணங்களினொழிவால் விசேஷ விஞ்ஞானமன்றி யெப்பொழுது சப்தாதிகளை யடையவில்லையோ அம்பொழுதாத்மாவுக்கு சுழுத்தி இம்மூவவ வஸ்தைகளினிருப்பு இல்லாமை இவ்விரண்டுக்கும் ஸாக்ஷியும் இல்லாமை யென்பது ஸ்தாவரக் கருத்து தனக்காவிர் பாவதிரோ பாவங்களற்றதும் இடைவிடாததுமான சைதன்னிய மெப்பொழுதோ அப்பொழுது அதுதுரீய சைதன்னியமென்று சொல் லப்படுகின்றது.

𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑍋𑌶𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑍂𑌹𑍋𑌽𑌨𑍍𑌨𑌮𑌯𑌕𑍋𑌶 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌵𑌾𑌯𑌵𑍋𑌽𑌨𑍍𑌨𑌮𑌯𑌕𑍋𑌶𑍇 𑌯𑌦𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 । 𑌤𑌦𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌯𑌕𑍋𑌶 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑌤𑍍𑌕𑍋𑌶𑌦𑍍𑌵𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌮𑌨𑌆𑌦𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌕𑌰𑌣𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑌦𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌮𑌨𑍋𑌮𑌯𑌕𑍋𑌶 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑌤𑍍𑌕𑍋𑌶𑌤𑍍𑌰𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑍍𑌞𑍋 𑌯𑌦𑌾 𑌭𑌾𑌸𑌤𑍇 । 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌕𑍋𑌶 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑌤𑍍𑌕𑍋𑌶𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌵𑌟𑌕𑌣𑌿𑌕𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌵𑍃𑌕𑍍𑌷𑍋 𑌯𑌦𑌾 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌤𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌕𑍋𑌶 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । [illegible]

அன்னகாரியங்களான மாம்ஸாதி கோசக்கூட்டமே அன்னமயகோசமெனப்படுகின்றது பிராணாதிகள் ௫ நாகாதிகள் ௫ ஆரம்பம் கடம் பரிசயம் நிஷ்பத்தி யென்று ௪ இப்பதினாலுவாயுக்க ளன்னமயகோசத்தி லெப்பொழுது இருக்கின்றனவோ அப்பொழுது பிராணமயகோசமெனப்படுகின்றது. இவ்விரண்டு கோசங்களுடன் மனதுமுதலிய ௧௪ கரணங்களா லாத்மாசப் தாதி விஷய ஸங்கல்பாதிதருமங்களை யெப்பொழுது செய்கிறானோ அப் பொழு தாத்மாவுக்கு மனோமய கோசமெனப்படுகின்றது இம்மூக்கோசங் களுட னதிலுள்ளவிசேஷங்களையறிந் தெப்பொழுது விளங்கிறானோ அப் பொழுது விஞ்ஞானமயகோசமெனப்படுகின்றது இன்னான்கு கோசங்களு டன் தனது காரணாஞ்ஞானத்திலாலின் விதையில் அம்மரம்போ லெப்பொ ழுதிருக்கிறானோ அப்பொழு தானந்தமயகோசமெனப்படுகிறான்.

𑌵𑌿𑌷𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 [illegible]

𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍀 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌶𑌰𑍀𑌰𑌸𑌂𑌯𑍋𑌗𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌶𑌰𑍀𑌰𑌸𑌂𑌯𑍋𑌗𑌮𑌿𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌯𑌦𑌾 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑍋𑌪𑌹𑌿𑌤𑌜𑍀𑌵 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌮𑌨𑌆𑌦𑌿𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌶𑍍𑌚𑍇𑌚𑍍𑌛𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌚𑍈𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌗𑌾 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵

சுகதுக்க புத்திகளையடுத்து எப்பொழுது வுள்கற்தனோ அப்பொழுது இஷ்டவிஷயத்தில் புத்திசுகபுத்தி அனிஷ்டவிஷயத்தில் புத்திதுக்க புத்தி சப்தஸ்பரி சரூபரஸகெந்தங்கள் சுகதுக்கங்களுக்கு ஹேதுக்கள் ஆத்மாபுண்ய பாவகருமானு ஸாரியாகி சரீர ஸம்யோகத்தையடைந்து மடையாதவனைப்போல் செய்கிறவனாக எப்பொழுது காணப்படுகிறானோ சரீரத்திலொன்றாகப் பற்றினவனென்று கருத்து அப்பொழுது உபகிதஜீவனெனப்படுகிறான் மனதுமுதலியதும் பிராணன் முதலியதும் இச்சைமுதலியதும் ஸத்துவகுண முதலியதும் புண்யமுதலியதுமான இவை பஞ்சவர்க்கங்கள்.

𑌰𑍍𑌗𑌾𑌣𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑍀𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍃𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌨𑌾𑌶𑌃 । 𑌆𑌤𑍍𑌮𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨 𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌾𑌧𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌶𑌰𑍀𑌰𑌂 𑌹𑍃𑌦𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌂 𑌸 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑌾𑌮𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌰𑌹𑌿𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂

இப்பஞ்ச வர்கங்களுக்கு தருமியான வாத்மஞானமின்றி விநாசமில்லை ஆத்மஸன்னிதியில் நித்தியமாகத்தோற்றுகின்ற வாத்மோபாதியெதோ அதுலிங்கசரீரம் ஹிரதயக்கிரந்தி யெனப்படுகின்றது அதிலெச்சைதன்னியம் பிரகாசிக்கின்றதோ அவன் க்ஷேத்திரஞ்ஞனெனப்படுகிறான் ஞாதாவான ஜீவன் ஞானமான அறிவுஞேயமான கடபடாதி யிவைகளுடைய ஆவிர்பாவதிரோ பாவங்களற்றவனும் ஸ்வயஞ்சோதியுமானவன் ஸாக்ஷியெனப்படுகிறான் இதில் மோக்ஷாவஸ்தையை யுத்தேசியாமல் ஸம்ஸார ஸ்திதிகாலங்களை யுத்தேசித்ததினா லுத்பத்தி நாசங்களைச்சொல்லாம லாவிர்பாவதிரோ பாவங்களைச் சொன்னதென்றறியத்தக்கது.

𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌷𑍍𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌥𑍋 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌪𑌹𑌿

[illegible]

பிர்ம்மாமுதல் எறும்புவரை ஸருவப்பிராணிபுத்திகளில சேஷித்த வனுயறியப்படுகிறவன் ஸர்வப்பிராணி புத்திகளிலு மெப்பொழுதிருக்கிறானோ அப்பொழுது கூடஸ்தனெனப்படுகிறான் கூடஸ்தனுக்கு முபஹித ஜீவனுக்கு மிருக்கின்ற பேதஸ்வரூபத்தின் லாபத்திற்கு ஹேதுவாகி மணிகளில் ஸூத்திரம்போல் ஸர்வசரீரங்களிலு மிடைவிடாமலெப்பொழு தாத்மா விளங்கிறானோ அப்பொழுதந்தரியாமியெனப்படுகிறான் ஸத்தியமும் ஞானமும அனந்தமு மானந்தமும் ஸர்வோபாதியற்றதும் கடகமகுடாதியு பாதியற்ற ஸுவர்ண கனம்போல் விஞ்ஞானமுமான ஆத்மா எப்பொழுது சின்மாத்திரஸ்வ பாவத்தால் விளங்கிறானோ அப்பொழுது தூவம்பதார்த்தனை பிரத்திய காத்மாவெனப்படுகிறான்.

ஸத்தியமும் ஞானமும் அனந்தமுமான பிர்ம்மம் ஸத்தியம் அவினாசி அவினாசியாவது தேசம் காலம் வஸ்துவென்ற நிமித்தங்கள் நசித்தும் எது நசிக்கவில்லையோ அது அவினாசி ஞானமாவது உத்பத்தி நாசமற்று இடைவிடாத சைதன்னியமே ஞானமெனப்படுகிறது அனந்தமாவது.

மிருத்தின் விகாரங்களான கடாதிகளில் மிருத்துப்போலவும் ஸுவர்ணத்தின் விகாரங்களான ஆபரணங்களில் ஸுவர்ணம்போலவும் நூலின்விகாரங்களான வஸ்திரங்களில் நூல்போலவும் அவ்வியக்தாதி ஸிருஷ்டிப்பரபஞ்சங்களில் பூர்ணவியாபகமான சைதன்னியமே அனந்தமெனப்படுகின்றது. ஆனந்தமாவது ஸுகசைதன்ய ஸ்வரூபமும் அளவற்ற ஆனந்த சமுத்திரமும் சேஷித்த ஸுகஸ்வரூபமுமானந்த மெனப்படுகின்றது. இந்த ௪ வஸ்துக்களுமெதின் லக்ஷணங்களோ தேசகால வஸ்து நிமித்தங்களில் நழுவாத அந்ததற்பதார்த்தம் பரமாத்மாவெனப்படுகிறான் உபாதியுடைய துவம்பதார்த்தனுக்கும் உபாதிபேதமுடைய தற்பதார்த்தனுக்கும் விலக்ஷணமும் ஆகாசம்போல் ஸூக்ஷ்மமும் கேவல ஸத்தாமாத்திர ஸ்வபாவமுமான வஸ்துபரப்பிர்ம்மமெனப்படுகின்றது. முன்சொல்லிய பரமாத்மாமுக்தஸாகார சித்ரூபநிர்க்குண பிர்ம்மமென்றும் இது நிராகாரரூப நிர்க்குணாதீதப் பிர்ம்மமென்றும் தெளிவாயிற்றென்றறியத்தக்கது.

[illegible] । ௧ । [illegible]
[illegible] ॥ ௨ ॥ [illegible]
[illegible] ॥ ௩ ॥ [illegible]
[illegible] ॥ ௪ ॥ [illegible]
[illegible] ॥ ௫ ॥ [illegible] ॥

மாயையாவது ஆதியந்தங்களற்றது பிரமாணங்களுக்கும் அப்ரமாணங்களுக்கும் சாதாரணமானது. சத்துமல்ல அசத்துமல்ல தன்னாலதிகமானது விகாரமற்றது நிரூபிக்கும்பொழுது வேறுலக்ஷணமற்றது அதுமாயையெனப்படுகின்றது. அது அஞ்ஞானமாதலால் ஞானிகளுக்குத் துச்சம் முக்காலங்களிலு மஸத்தாயினும்பாமரர்களுக்கு வாஸ்தவம் லவுகிகர்களுக்கு ஸத்தியபுத்தி இது இங்ஙனமென்று வசனிக்கத்தகாதது ஆதலால் சொல்ல முடியாது.

இவ்விதமான தேகம்யானாகவில்லை மி கருவிகளுமல்ல புத்தியும்யானல்ல மனதும்யானல்ல எப்பொழுதுமிருந்த அகங்காரமும் யானல்ல பிராணனும் மனதுமற்று தெளிவானவனும் ஸருவதா புத்தியாதிகளுக்குச் சாக்ஷியும் நித்தியனும் சின்மாத்திரனும் யான் இதிலையமில்லை யான் கர்த்தாவுமல்ல போக்தாவுமல்ல பிரகிருதிக்கு சாக்ஷிரூபி எனது ஸான்னித்தியத்தால் தேகாதிகளும் அஜடங்கள்போல் பிரவிருத்திக்கின்றன. அசஞ்சலனும் நித்தியனும் ஸதானந்தனும் சுத்தனும் ஞானமயனும் நிர்மலனும் ஆத்மாவுமான யான் ஸர்வபூதங்களுக்கும் விபுவும் ஸாக்ஷியுமாகிறேன். ஸர்வவேதாந்தங்களாலு மறியத்தக்கன பிர்ம்மம் யானே ஆகாசம் வாயு முதலியரூபமாக அறியத்தக்கதுயானல்ல நாமரூபங்களும் கருமமும் யானல்ல . ஸச்சிதானந்த ரூபமான பிர்ம்மமேயான் யான் தேகமல்ல இங்ஙனமான எனக்கு ஜன்மமரணங்களேது. யான் பிராணனல்ல பசிதாகங்களெனக்கேது யான்சித்தமல்ல சோகமோஹங்களெனக்கேது யான் கர்த்தாவல்ல பந்தமோக்ஷங்களெனக்கேது என்று ஸர்வஸாரோபநிஷத்து முற்றிற்று.

இதில் கேழ்வி.

எங்ஙனம் மோக்ஷமென்ற கேழ்விக்கு யான் பிர்ம்மமாகிறேனென்று அபரோக்ஷஞானத்தால் தேகாதியபிமானத்தை யெப்பொழுதுவிடுகிறானோ அப்பொழுதாத்மாவுக்கு மோக்ஷமென்று வுத்தரஞ்சொல்லியிருப்பதால் சுத்தாத்துவைதிகளின் கொள்கைப்படி கேவலஞான மாத்திரத்தால் மோக்ஷமென்று நிச்சயிக்கலாமேயின்றி ஞானயோக ஸமுச்சயத்தால் மோக்ஷமென்று அனுபவாதத்துவைதியின் கொள்கைக்கவகாசமில்லை இவ்வுபநிஷத்தோ ஸர்வஸாரமென்று பெயருமுடையது ஆதலாலிதற்கு வேறுவிதமாகவொருவராலுஞ் சொல்லக்கூடாதெனில்.

உத்தரம்.

அபரோக்ஷ ஞானமென்பது அசுத்தியஞ் ஞானம் ஸம்சயம் விபரியயமென்ற ௩ பிரதிபந்தங்களில் ௪ யதான விபரியயமுடையதா அல்லததற்றதா அதற்றதாகி லப்பொழுது நிதித்தியாஸனமென்ற ஞானயோகாப்பியா

ஸமன்றியப் பிரதிபந்தம் நசியாதே முந்திய ஜன்மத்தில் செய்த நித்தியாஸ னயோகத்தா லப்பிரதிபந்தம் நசித்தவனுக்கிச் சென்மத்தி லய்யோகம ஞவச் சியமெனில் முன்னமே அது நசித்திருந்தாலிச் சென்மம் வரக்காரணமிய் லேயே விபரியயம்நசித்தும் அஞ்ஞானம் நசியாததினு லிச்சென்மம் வந்த தெனில் சிரவணத்தால் நசிக்கக்கூடிய அஞ்ஞானம் நிதித்தியாஸனஞ்செய்தவ னுக்கிருக்கக் காரணமில்லை இங்ஙனமாகும்பொழுது அனுபவாத்துவைதியி ன் கொள்கைப்படி ஞானயோக ஸமுச்சயத்தால் மோக்ஷமென்பது நியாய மேயின்றி சுத்தாத்துவைதியின் கொள்கைப்படி கேவலஞானத்தால் மோ க்ஷமென்பதெள்ளளவும் நியாயமல்ல இவ்வுபநிஷத்தும் யான் பிர்மமாகிறே னென்ற யஜுர்வேத மஹாவாக்கியத்தை யடுத்ததேயின்றி அதுநீயாகிறு யென்ற ஸாமவேத மஹாவாக்கியத்தை யடுத்ததல்ல இதையடுத்திருக்குமா கி லப்பொழுது சிரவணமாத்திர வாத முபயோகப்படும் இதையடாததினும் சிரவணமாத்திர வாதியான சுத்தாத்துவைதிக் கொருவுபநிஷத்திலு மவகாச மில்லையென்று திடமாக நிச்சயிக்கவேண்டியது.

கேழ்வி.

இந்த ஞானயோக ஸமுச்சயமான நிதித்தியாஸனமென்ற பிர்மாத் மைக்கியோ பாஸனையை விஸ்தாரமாகச் சொல்லவேண்டு மென்பவருக்கு.

உத்தரம்.

இஞ்ஞானயோகத்தை ஸ்திரப்படுத்துகிற தற்காகவே வெகுவிஸ்தா ரமாக நம்மாலனே கப்பிரபந்தங்கள் முன்செய்யப்பட்டிருக்கின்றன அவை களைப் பார்க்கவேண்டியது அவைகளாவைகளெனில்.

௧	ஈஶோபநிஷத்பாஷ்யம்	௨௩	பஞ்சீகரணம்
௨	ஆத்மோபநிஷத்பாஷ்யம்	௨௪	ஸாரஸங்க்ரஹவ்யாக்யா
௩	ஶ்வேதாஶ்வதரோபநிஷத்பாஷ்யம்	௨௫	பஞ்சதஶீப்ரகரணம்
௪	ப்ரஹ்மஸூத்ரபாஷ்யம்	௨௬	ஶங்கரவிஜய:
௫	ப்ரஹ்மஸூத்ரவ்ருத்தி:	௨௭	ஸர்வஸித்தாந்தஸங்க்ரஹ:
௬	ஸநத்ஸுஜாதீயபாஷ்யம்	௨௮	கைவல்யோபநிஷத்
௭	ஸநத்ஸுஜாதீயவ்ருத்தி:	௨௯	பாஷ்யதீபிகா
௮	பகவத்கீதாபாஷ்யம்	௩௰	பாராயணவ்யாக்யா
௯	ஹரிஹரப்ரஹ்மஸூத்ரஸ்தவம்	௩௧	தக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரவ்யாக்யாநம்
௰	ஶோபநஸூதிகா	௩௨	காஞ்சீமாஹாத்ம்யவ்யாக்யா
௰௧	ஶோபநஸூத்ரம்	௩௩	பஞ்சரத்நம்
௰௨	ஸர்வதர்ஶநஸங்க்ரஹ:	௩௪	ப்ரஹ்மதத்வப்ரகாஶ:
௰௩	ஸாநந்தஸூக்திரத்நம்	௩௫	பக்ஷஸங்க்ரஹ:
௰௪	கைவல்யோபநிஷத்	௩௬	ஸ்ரீராமகீதாவ்யாக்யா
	ஷை தமிழ்		
௰௫	ஶங்கரத்ரம் தமிழ்	௩௭	யோகஸார:
௰௬	ஸுப்ரஹ்மண்யாஷ்டகம் ஷை	௩௮	ஆத்மாநாத்மவிவேக:
௰௭	ப்ரஹ்மஸ்தோத்ரம்	௩௯	ஸம்க்ஷேபஸ்தோத்ரவ்யாக்யாநம்
௰௮	ஈஶோபநிஷத் தமிழ்	௪௰	இந்த பாலபோதினீ
௰௯	த்ராவிடஸூத்ரம்	௪௧	ஜ்யோதிஷ்ஸார:
௨௰	யோகநவநீதம்		
௨௧	ஜீவன்முக்தி:		
௨௨	வ்யவஹாரமாலா		

இவ்வளவும் ஸுமார் உ-லக்ஷம் கிரந்தகளுக்கு மேலுள்ளது.

கேழ்வி.

சொலலிய பிரபந்தஙகளெல்லா மிப்பாலபோதினிபோல் ஞானயோக ஸமுச்சயார்தமாகவே யிருக்கு மொருவரால் செய்யப்பட்டதினல் வேறுவிதங்களாயிராதுகள் ஆயினு மிப்பிரபந்தங்களைச் செய்தது வீணேயாகின்றது ஏதெனில் உலகத்தில் பிரசித்தர்களாயிருக்கின்ற விசிஷ்டாத்துவைதிகளும் சுத்தாத்துவைதிகளுஞ் செய்திருக்கின்ற பிரபந்தங்க ளொன்றுக்கொன்று வெகுவிருத்தங்களாயினு மவ்விரண்டுப் பிரபந்தங்களிலிருந்தும் சிலசிலபாகங்களையெடுத்தே யிப்பிரபந்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருவதா லவ்விருவர்களும் பரஸ்பரம் கண்டனஞ் செய்தப்பிரகார மிவைகளும் கண்டிதங்களேயாகு மாதலா லிப்பரிச்சிரம மனுபவாத்துவைதிக் குபயோக மற்றதென்பவருக்கு.

உத்தரம்.

அவ்விருவகைக் காரர்களும் சுவப்னத்திலு மெடுத்துக்கொள்ளாத ஈஅ உபநிஷத்துகளையே முக்கியங்களாயெடுத்து செய்யப்பட்ட விப்பிரபந்தங்களில் சொல்லிய சங்கதிகளி லொன்றையாவ தவர்கள் தெரியாதவர்களாதலா லிவைகளைக்கண்டிக்க வொருக்காலு மவர்கள் வல்லவர்களாகார்கள் க-வது அவ்விரண்டு மதங்களிலும் பரவஸ்துநிர்ணயமே சரியாகவில்லை ஏதெனில் வைகுண்டவாஸியான லக்ஷ்மீபதியே பரவஸ்துசந்திரிகா நியாயப்படியவரது சக்தியேஸருவ வுலகங்களையும் வியாபித்ததென்று விசிஷ்டாத்துவைதிகளின் கொள்கை இவ்விதமான பரவஸ்துவையு பாஸித்த ஜீவனுக்கச்சக்தி சொந்தப்படாம லவ்வுலகத்தில் வஸிப்பதே மோக்ஷமென்றுஞ் சொல்கின்றனர் ஆதலால் முமுக்ஷுவுக்கு ஸர்வவியாபகத்து வஞ்சித்திக்கயார்க்கமற்ற விசிஷ்டாத்துவைதிகளின் பிரபந்தங்களிலிருந்து எள்ளளவும னுபவாதி துவைதியாலெடுக்கப்பட வில்லையென்று தெளிவாயிற்று.

அகண்டஸச்சி தானந்தாமூர்த்த நிர்க்குணகைவல்ய முக்திக்கிடமில்லாதஅவ்விசிஷ்டாத்துவைதத்தைச் சிரஸில்குல்லாவாகவும் துவைதம் அத்துவைதமிரண்டையும் பாதகொரடுகளாகவுஞ் செய்துகொண்டதாகச்சொல்லிக்கொண்ட வொருவிசிஷ்டாத் துவைதியின்மதம் பெரிதேயின்றி மதம் பெரிதல்ல. சுத்தாத்துவைதி தீர்மானித்த பரவஸ்துவோவெனில் வாக்குமனதுகளுக்கெட்டாத வஸ்துப்பிர்மம் முமுக்ஷுவால் தியானிக்கத்தகாதது விசாரமாத்திரத்தா லறியத்தக்கது தியானேபாஸனையன்றி மனோநாச வாஸனக்ஷயங்கள் சித்தியாதேயெனில் மனது முதலிய ஸகலமும் முசல்கொம்புபோல் முக்காலங்களிலு மில்லாததுகள் ஆனலெதாலறியச் சொன்னதெ

னில் பிராந்தியால் சித்தித்தமனதா லென்றிங்ஙனம் பிராந்தியிலேயே முடிந்தஅம்மதமு முபயோகமற்றதென்று நிச்சயித்து தியானிக்கத்தக்கன ஸச்சிதானந்த லக்ஷணங்களுடைய நிர்குணபரப்பிர்ம்மத்தை ஜீவோத்பத்திக்குமுன்னுள்ளதாகவும் அதைத்தியானோபாஸனையினல் அபரோக்ஷமாயனுபவித்த ஜீவன்முக்தருக்கு ப்பிராரப்ததேகம் விழுந்தபின் வாக்குமனதுகளுக்கெட்டாத வரூபப்பிர்மமே சேஷிக்கின்றதென்றும் அனுபவாத்துவைதி தீர்மானித்ததே சரியென்று ஸகலவித்வான்களாலு மறியத்தக்கது.

𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 । 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌏𑌵 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌾𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌤𑍁 𑌜𑌨𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌮𑍇𑌕𑌂 𑌲𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑌨𑍍𑌯𑌦𑌿𑌤𑌿 [illegible] ॥

இதின்பொருள்- எதிலிருந்து இப்பூதங்களுண்டாயிற்றுகளோ வென்பது முதலிய சுருதிகளாலும் ஜன்மாதி ஸூத்திரத்தாலு மொரேப்பிர்ம்மம்காரணமாக வறியப்படுகிறதேயன்றி ஜன்மகாரணமொன்று லயகாரணம் வேறென்றறியப்படவில்லையே யெனில் அச்சுருதியில் பூதங்கள் ஜனிக்கின்றன ஜீவிக்கின்றன லயிக்கின்றனவென்று மூன்றுவிகாரங்களை சொன்னபின்யெங்கும் நன்ருய்ப் பிரவேசிக்கின்றனவென்று சொல்லியிருப்பதா லிது மோக்ஷமென்ற மஹாப்பிரளய காரணமான வரூபப்பிர்ம்மமென்று தெளிவாயிற்று ஸூத்திரக்காரரும் ட்சிரததியுபமையாலும் தேவாதியுபமையாலும் உத்பத்திகாரணத்திற் கன்னியமே பிரளயகாரணமென்ருர். ஆதலால் பிரகிருத காரணபேதவாதம் மிகவும் சரியானதென்றறியவேண்டியது.

கேழ்வி.

ப்ரயந்தியென்றும் அபிஸம் விசந்தியென்றும் சொல்லிய பிரளய ஸ்தானங்கள் உ-ம்ஸுஷுப்தனென்ற ஸகுணஜீவனும் அந்தரியாமியென்

ற ஸகுணேசுவரனுமா அல்லது ஸகுணேசுவரனும் நிர்க்குணப்பிர்மமுமா அல்லது நிர்க்குணப்பிர்ம்மமும் நிர்குணாதீதபிர்ம்மமுமாவென்று சங்கிப்பவருக்கு

உத்தரம்.

கிரமமுக்தி ஜீவன்முக்தி விதேகமுக்தியென்ற மூன்றுவிதமுக்திகளின் விஷயமாகமூன்று விகற்பங்களும் சரியாகவே சித்திக்கின்றன ஆதலாலொன்றும் குற்றமல்ல இங்ஙனமாரம்பவாதத்தை யனுஸரித்து நிரூபித்ததுநிற்க பரிணாமவாத விவர்த்தவாதங்களை யனுஸரித்து நிரூபிப்பதிலும் குற்றமில்லை அதெங்ஙனமெனில் பிர்ம்மாவால் பஞ்சபூதபஞ்சீகரணத்தால் சிருஷ்டிக்கப்பட்டதினால் தூலப்பிரபஞ்சம் பஞ்சபூதபரிணாமமாயினும் விவர்த்தவாதத்தை யடுத்து பொய்யென்ற நிச்சயமான பரோக்ஷஞான முதிக்கின்றது. ஜீவனால் ஜாக்கிறவாஸனையால் கற்பிக்கப்பட்டதினால் விவர்த்தமென்ற பொய்யாயினும் ஸூக்ஷ்மபிரபஞ்சம் பரிணாமவாதத்தை யடுத்த நிதித்தியாஸனவுபாஸனையால் நசித்து அபரோக்ஷஞான முதிக்கின்றது.

கேழ்வி.

கூச வதாகிய நிராலம்போபநிஷத்தில் மிகவுமிரஹஸியங்களான அர்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று கேழ்வியாகின்றது ஆதலா லவ்வுபநிஷத்து முழுவதையும் வியரிக்கவேண்டு மென்பவருக்கு.

உத்தரம்,

ஏஷாமஜ்ஞாநஜந்தூநாம் ஸமஸ்தாரிஷ்டஶாந்தயே | யத்யத்
போத்தவ்யமகிலம் தச்சங்க்ய ப்ரவீம்யஹம் ||

இந்த அஞ்ஞானஜந்துக்களுக்கு ஸமஸ்தபீடைகளும் சாந்தங்களாகிறதற்கு எதெதுஅறியவேண்டுமோ அதையெல்லாம் சங்கித்துச் சொல்கின்றனன்.

கிம் ப்ரஹ்ம | க ஈஶ்வர: | கோ ஜீவ: | கா ப்ரக்ருதி: | க: பரமாத்மா | கோ ப்ரஹ்மா | கோ விஷ்ணு: | கோ ருத்ர: | க இந்த்ர: | க: ஶமந: | க: ஸூர்ய: | க: சந்த்ர: | கே ஸுரா: | கே அஸுரா: | கே பிஶாசா: | கே மநுஷ்யா: | கா: ஸ்த்ரிய: | கே பஶ்வாதய: | கிம் ஸ்தாவரம் | கே ப்ராஹ்மணாதய: | கா ஜாதி: | கிம் கர்ம | கிமகர்ம | கிம் ஜ்ஞாநம் | கிமஜ்ஞாநம் | கிம் ஸுகம் | கிம் து:கம் | க: ஸ்வர்க: கோ நரக: | கோ பந்த: | கோ மோக்ஷ: | க உபாஸ்ய: | க: ஶிஷ்ய: |

கோவித்வாந் | கோமூட: | கிமாஸுரம் | கிம் தப: | கிம் பரமம் பதம் | கிம் க்ராஹ்யம் | கிமக்ராஹ்யம் | க: ஸந்ந்யாஸீத்யாஹ ||

எதுபிர்ம்மம் எவரீசுவரர் எவன்ஜீவன் எதுபிரகிருதி எதுபரமாத்மா எவர்பிர்ம்மா எவர்விஷ்ணு எவர்ருத்திரர் எவரிந்திரன் எவர்அக்னி எவர்ஸூரியன் எவர்சந்திரன் எவர்கள்ஸுரர்கள் எவர்கள்அஸுரர்கள் எவைகள் பிசாசுகள் எவர்கள்மனிதர்கள் எவர்கள்ஸ்திரீகள் எவைகள்பசுவாதிகள் எதுஸ்தாவரம் எவர்கள்பிராமணாதிகள் எதுஜாதி எதுகருமம் எதுஅகருமம் எதுஞானம் எதுஅஞ்ஞானம் எதுசுகம் எதுதுக்கம் எதுஸ்வர்க்கம் எதுநரகம் எதுபந்தம் எதுமோக்ஷம் எவருபாஸிக்கத்தக்கவர் எவன்சிஷ்யன் எவன்வித்வான் எவன்மூடன் எதுஆஸுரம் எதுதவம் எதுபரமபதம் எதுகிரஹிக்கத் தக்கது எதுகிரஹிக்கத்தகாதது எவர்ஸன்னியாஸி யென்றிங்ஙனம் சகசங்கைகளைச்செய்து கிரமமாக வுத்தரஞ்சொல்கின்றனர்.

ப்ரஹ்மேதி | ஸ ஹோவாச மஹதஹங்காரப்ருதிவ்யப்தேஜோவாய்வாகாசத்வேந ப்ருஹத்ரூபேணாண்டகோசேந கர்மஜ்ஞாநார்த்தரூபதயா பாஸமாநமத்விதீயமகிலோபாதிவிநிர்முக்தம் தத்ஸகலசக்த்யுபப்ருஹ்மிதமநாத்யந்தம் சுத்தம் சிவம் சாந்தம் நிர்குணமித்யாதிவாச்யமநிர்வாச்யம் சைதந்யம் ப்ரஹ்ம ||

பிர்ம்மமென்பது மகத்அகங்காரம் பிரதிவிமுதலிய பஞ்சமாபூதங்களிவைகளால் பெரிதான வுருவமுடைய அண்டகோசத்துடன் கருமம் ஞானம்பொருளிவைகளி னுருவமாக விளங்கிறது மிரண்டாவதற்றதும் ஸகலோபாதியற்றதும் தனது ஸகலசக்திகளால் விருத்தியானதும் ஆதியந்தமற்றதும் சுத்தமும் சிவமும் சாந்தமும் நிர்குணமுதலிய சப்தவாச்சியமும் லவுகிக சப்தங்களால் வசனிக்கத்தகாததுமான சைதன்யமே பிர்ம்மம் இதில் கருமஞானார்த்த சப்தத்தாலும் அகிலோபாதியற்றதென்ற சப்தத்தாலும் ஸகுணநிர்குண ஸமுச்சிதமான பிர்மஞ்சொல்லப்பட்டதினால் மஹாநாராயணோபநிஷத்தில்சொல்லிய ஸோபாதிகஸாகாரமும் நிருபாதிகஸாகாரமுஞ் சொல்லப்பட்டதாக அறியத்தக்கதேயின்றி நிராகாரபிர்ம்மமும் சொல்லப்பட்டதாக அறியத்தக்கதில்லை.

ஈச்வர இதி | ப்ரஹ்மைவ ஸ்வசக்திம் ப்ரக்ருத்யபிதேயாமாச்ரித்ய லோகாந்ஸ்ருஷ்ட்வா ப்ரவிச்யாந்தர்யாமித்வேந ப்ரஹ்மாதீநாம் புத்தீந்த்ரியநியந்த்ருத்வாதீச்வர: ||

இதின்பொருள் ஈசுவரனென்பது சொல்லிய வுபயாத் மகப்பிர்ம்மமே பிரகிருதியென்ற தனது சக்தியையடுத்து அரியனாரனை ஸமஸ்தலோகங்களை விரிஷ்டித்து அவைகளி லந்தரியாமியாகப் பிரவேசித்து பின்னால வுலகங்களின் விரிஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைசெய்ய பிர்ம்மவிஷ்ணு ருத்திரர்களாகி யவர்களின் புத்தியிந்திரியாதிகளுக்கு நியந்தாவாகவிருந்து மிருக்குமவ னென்று இவர்த்தம் முந்தியப்பிரகரணத்திலுந் தெளிவாகச் சொல்லப்பட்டது.

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

ஜீவனென்பது பிர்ம்ம விஷ்ணு ருத்திரேந்திராதிகளின் ஸாமருபமூர்த்தியாக யான்றாலென்றும் பொய்யாகப்போகிறதுமான அந்தியனமாத்திரத்தால் ஜீவன் இவனுமொருவனுயினும் வெகுதேகபேதமாத்திரத்தால் வெகுஜீவனாகிறான் பிர்ம்மவிஷ்ணு வாதிகள் ஜீவபுத்திவிசாரதவர்களென்று ஸமஸ்தம் ஸம்ஹிதையில் சொன்னபோதிலு மிதுவிசாரணமற்ற ஸாமான்ய வாக்கியமாதலால் குற்றமில்லை. உபநிஷத்வாக்கியம் ஸாமான்யமும் புராணவாக்கியம் விசேஷமுமாகுமாவெனிலுபபிர்பணை புராணவாக்கியம் விசேஷமாகுமென்று ஸகலவித்வான்களுடைய கொள்கையிருப்பதால் குற்றமில்லையென்றறிய வேண்டியது.

[illegible] ।
[illegible] ॥

பிரகிருதியென்பது பிர்ம்மத்திலிருந்து நாநாவிதங்களும் விசித்திரங்களுமான வுலகங்களை சிரிஷ்டிக்கிற ஸாமர்த்தியத்தால் புத்திரூபயான பிர்ம்மசக்தியே பிரகிருதி இப்புத்தியானது ஜீவபுத்திபோலா வித்தியகமுமல்ல ஈசுவரபுத்திபோல் மாயிகமுமல்ல வென்றறியத்தக்கது.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] ॥

பரமாத்மா வென்பது தேகாதிக்கப் புரப்பட்டதினுல் பிர்ம்மமே பரமாத்மா இதிலிங்ஙனம் அபேதஞ்சொன்னபோதிலும் மகாநாராயணப்படி பிர்ம்மமென்பது நித்திய ஸாகாரமென்றும் பரமாத்மாவென்பது முக்தஸாகாரமென்றும் பேதமறியத்தக்கது பிர்ம்மாமுதல் பிராம்மணுதிகள்வரை ஸகலமும் பிர்ம்மமே இவ்வியவகாரதெசையில் ஜாதிவியவகாரம் வாஸ்தவமாயினும் பரமார்த்தமான மோக்ஷதெசையி லற்றுப்போகிறதினுல் கற்பிதமே ஜீவன்முக்தர்களுக்கோ வெனி லுலகவுபகாரமாக ஜாதிபேதானுஷ்டான விதியிருப்பதால் வாஸ்தவமே.

கர்மேதிச | க்ரியமாணேந்த்ரியை: கர்மாண்யஹங்கரோமீதி அத்யாத்மநிஷ்டதயா க்ருதம்கர்மைவகர்ம ||

கருமமென்பது இந்திரியங்களால் செய்யப்படுகிற கருமங்களை யான்செய்கிறேனென்று அத்தியாத்ம விசாரத்துடன் நிஷ்காமமாகச்செய்யப்படுகிற கருமமே கருமம்.

அகர்மேதிச | கர்த்ருத்வபோக்த்ருத்வாத்யஹங்காரதயா பந்தரூபம்ஜந்மாதிகாரணம் நித்யநைமித்திகயாகவ்ரததபோதாநாதிஷு பலாபிஸந்தாநம் யத்ததகர்ம ||

அகருமமென்பது கருத்திருத்துவ போக்திருத்துவாதியகங்காரத்துடன் நித்தியகருமங்கள் நைமித்திக கருமங்கள் யாகங்கள் விருதங்கள் தவங்கள் தானங்கள் இவைகளில் பயன்களை யிச்சிப்பதே அகருமம்

ஜ்ஞாநமிதிச | தேஹேந்த்ரியநிக்ரஹஸத்குரூபாஸநச்ரவணமநநநிதித்யாஸநைர்யத்யத்த்ருக்த்ருச்யஸ்வரூபம் ஸர்வாந்தரஸ்தம் ஸர்வஸமம் கடபடாதிபதார்த்தமிவாவிகாரம் விகாரேஷு சைதந்யம் விநாகிஞ்சிந்நாஸ்தீதி ஸாக்ஷாத்காராநுபவோ ஜ்ஞாநம் ||

ஞானமென்பது கவுணகுருவினுபதேச வழியாக கூடஸ்தாத்மதெரிசனத்தால் தேகேந்திரிய நிக்கிரஹமும் ஸத்குருவினுபாஸனமும் பின்னதால்கிடைத்த மஹாவாக்கியார்த்தச்சிரவண மனனநிதித்தியாஸனங்களுமிவைகளாலெந்தஸ்வரூபம் பார்க்கத்தக்கதோ அது ஸர்வத்திலுமுள்ளிருக்கின்றதும் ஸர்வஸமமும கடபடாதிபதார்த்தத்தில் போல் நிர்விகாரமுமா

ரும் கடாதிவிகாரங்களில் சைதன்னியத்தைத் தவிர வொன்றுமில்லையெ
ன்ற ஸாக்ஷாத்காரானுபவமே ஞானம்.

[illegible]

அஞ்ஞானமென்பது பழுதையில் ஸர்ப்பப்பிராந்திபோல் அத்வைதமுமி டைவிடாததும் ஸர்வமயமுமானப் பிர்ம்மத்தில் தேவநரதிரியக்குகளான ஜீவர்களும் ஸ்தாவரங்களும் ஸ்திரீ புருஷன் வர்ணம் ஆசிரமம் பந்தம் மோக்ஷம் நாநாவிதவுபாதிகள் ஆத்மபேதமிவைகளாக கற்பிக்கப்பட்ட ஞானமே அஞ்ஞானம் முன்சொல்லிய ஞானமின்றி வருணாசிரமாதி பேதத்தை விடவே ஞானமென்றெண்ணிய திவருணாசிரமியாகிறவன் மஹாபதித னென்று நிச்சயிக்கத்தக்கது.

[illegible]

ஸுகமென்பது ஸச்சிதானந்த ஸ்வரூபத்தையறிந்து ஆனந்தஸ்வ ரூபனாக எவனிருக்கிறானோ அவனே ஸுகம் அனாத்மாவும் அஸத்துமான

விஷயத்தை யிச்சிப்பதே நரகம் ஸ்வர்க்கமென்பது ஸத்புருஷர்களுடன் சேருவதே நரகமென்பது அஸத்புருஷர்களுடன் செருவதே பந்தமென்பது ஆதிகாலந்தெரியாததினு லனுதியென்று வுபசரிக்கப்படுகிற அவித்தையின்வாஸனையால் யான் ஜனித்தேனென்பது முதலிய ஸங்கல்பமும் பந்தம் பிதாமாதா ஸஹோதரம் புத்திரன் கிரஹம் தோப்பு வயலிவைகளிலெனதென்ற ஸம்ஸாராவரண ஸங்கல்பமும் பந்தம் கருத்திருத்துவாதி யஹங்கார ஸங்கல்பமும் பந்தம் அணிமாதிஐசுவரியங்களிலாசையால் ஸித்திகளின் ஸங்கல்பமும் பந்தம் தேவர்கள் மனிதர்கள் முதலியவர்களை ஸேவிக்க இச்சிப்பதும் பந்தம் ஸித்திகளுக்காகயமாதியஷ்டாங்கயோக ஸங்கல்பமும் பந்தம் வருணச்சிரம தருமகரும ஸங்கல்பமும் பந்தம் அஞானம் பயம் ஸம்சயமாத்மவத்ஸர்வகுணவாஞ்சை இவைகளும் பந்தம் யாகம் விருதம் தவம்தானம் சிரௌதஸ்மார்தவிதி விதானஞானமிவைகளி லிச்சையும் பந்தம்மோக்ஷப்பிரவிருத்தியின்றி மோக்ஷயிச்சை மாத்திரமிருப்பதும் பந்தம் ஸங்கல்பமாத்திரமுதிப்பதும் பந்தம்.

𑌮𑍋𑌕𑍍𑌷 𑌇𑌤𑌿 । 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌚𑌾𑌰𑌾𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌵𑌿𑌷𑌯𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌮𑌤𑌾𑌬𑌨𑍍𑌧𑌕𑍍𑌷𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 । 𑌉𑌪𑌾𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌦𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑍋 𑌗𑍁𑌰𑍁𑌰𑍁𑌪𑌾𑌸𑍍𑌯𑌃 । 𑌶𑌿𑌷𑍍𑌯 𑌇𑌤𑌿 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌂 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 । 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌥𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 । 𑌮𑍂𑌢 𑌇𑌤𑌿 । 𑌕𑌰𑍍𑌤𑍃 [illegible] ॥

மோக்ஷமென்பது நித்தியாநித்திய வஸ்துவிசாரத்தால் அனித்திய ஸம்ஸார ஸுகதுக்கங்களிலும் ஸமஸ்தக்ஷேத்திரவிஷயங்களிலும் எனதென்றபந்தம் க்ஷயிப்பதே மோக்ஷம் உபாஸ்யரென்பவர் ஸர்வசரீரங்களிலுமிருக்கின்ற பிர்ம்மசைதன்யபதத்தை யடையச்செய்கிற குருவுபாஸிக்கத்தக்கவர் சிஷ்யனென்பது அவித்தையால் கற்பிதமானப் பிரபஞ்சத்தில் முழுஞானத்தால் சேஷித்தப் பிர்ம்மமே சிஷ்யன் வித்வானென்பது ஸர்வத்திலுமுள்ளிருக்கின்ற தனது ஞானத்தையறிந்தவன் வித்வான் மூடனென்பது

கருத்திருத்துவாதி யஹங்காரபாவனையி லேறினவன் மூடன் ஆசாரமென்பது பிர்ம்ம விஷ்ணு ருத்திரேந்திராதிகளினைசுவரியகாம்க்ஷையால் ஆகாரமன்றி ஜபம் அக்னிஹோத்திராதியிவைகளி லந்தராத்மாவை தபிப்பிப்பதும் மிகக்கடினமான ராகம் துவேஷம் ஹிம்ஸை டம்பம் இவைகளை யபேக்ஷித்த தவம் ஆசாரம்.

[illegible] ||

தவமென்பது பிர்மம்ஸத்தியம் ஜகம்மித்தையென்ற வைராக்ய ஞானாக்கினியால் பிர்ம்மாதி தேவர்களினைசுவரியங்களி லாசையால் வித்திஸங்கல் பபீஜங்களை நன்றாகதபிப்பது தவம் பரமபதமென்பது பிராணேந்திரியாதியந்தக் கரணகுணாதிகளுக்கு மேலான ஸச்சிதானந்தமய நித்தியமுத்தப்பிர்ம்மஸ்தானம் பரமபதம் கிராஹ்யமென்பது தேசகாலவஸ்துக்களின் பரிச்சேதமற்ற சின்மாத்திரப்பிர்மஸ்வரூபம் கிரஹிக்கத்தக்கது அக்கிராஹ்யமென்பது தனது ஸ்வரூபத்திற்கன்னியமு மாயாமயமுமான புத்தீந்திரியங்களுக்குக் கோசரமான வுலகத்தில் ஸத்தியத்துவ சிந்தனம் கிரஹிக்கத்தக்க

தல்ல ஸன்னியாஸமென்பது ஸர்வகாம்ய தருமங்களைத் தள்ளியெனதென் பதும் யானென்பதுமற்று இஷ்டமான பிர்மமத்தைச் சரணமடைந்து அது நீயாகிருய் இதெல்லாம் பிர்ம்மம் இதில் நாநாவொன்றுமில்லை யென்பது முதலிய மஹாவாக்கியார்த்தானுபவ ஞானத்தால் பிர்ம்மமே யானுகிறேனெ ன்று நிச்சயித்து நிர்விகல்ப ஸமாதியால் ஸ்வதந்திரனுக ஸஞ்சரிக்கின்றயதி யே ஸன்யாஸி அவரேமுக்தர் அவரேபூஜிக்கத்தக்கவர் அவரேயோகி அவரே பரமஹம்ஸர் அவரே அவதூதர் அவரேபிராமணன் என்ற நிராலம் போபநிஷ த்தையத்தியயனஞ் செய்கிறவன் குருவினனுக்கிரஹத்தா லக்கினியாலும் வாயுவாலும் பரிசுத்தனுகிருன் அவன் பிர்ம்மலோகத்தையடைந்து திரும்பி வரான் ஜீவன்முக்தனுனவன் மறுஜன்மத்தை யடையானென்று நிராலம் போபநிஷத்.

கேழ்வி.

ஸர்வகாம்ய தருமங்களைத் தள்ளியென்று வியாக்கியானித்ததினுல் கிரஹஸ்தாச்சிரமியும் பிரகிருதராகலாமென்று அனுபவாத்துவைதியான வுங்களுடைய கருத்துக்காணுகின்றது இக்கருத்துக்கிடமில்லையேதெனில் யதியென்ற சப்தமிருக்கிறதல்லவா ஆதலால் சுத்தாத்துவைதியின்கொள்கை ப்படி ஸர்வகரும ஸன்யாஸத்தையே யிவ்விடத்தில் தீர்மானிப்பதுசரி அல் லது விசிஷ்டாத்துவைதிகளின் அனுஷ்டானப்படி கூடீசகம் பஹூதகமெ ன்ற திருதண்ட ஸன்னியாஸத்தை தீர்மானிக்கலாமென்பவருக்கு.

உத்தரம்.

யத்தினஞ்செய்கிறவனென்ற யோகவிருத்தியுடையது யதிசப்தமே யின்றி ரூடிவிருத்தியுடையதல்ல அல்லது ரூடிவிருத்தியுடையதாயிருந்த போதிலுமவ்வித ஸர்வகருமஸன்யாஸத்தை யிக்கலியுகத்திற்கு பராசரர்வி லக்கியிருப்பதா லிதையனுஸரியாமல் சுத்தாத்துவைதியி னனுஷ்டானத் தை யிக்காலத்தார் அனுஸரிப்பது மெத்தத்தப்பு ஆயினுமாபத் ஸன்யாஸ மூந் திருதண்ட ஸன்யாஸமும் யதேச்சாசாரத்திற் கிடமற்றதினுல் குற்றம ற்றதுகள் ஆனுலிக்கலியுகத்தில் ஸர்வகருமஸன்னியாஸம் நிஷேதிக்கப்படு மெனி லங்ஙனம் நிஷேதவசனமுமில்லை யுக்தியுமில்லை கலியில்கிருதயுக தருமத்தை யனுஷ்டிக்கிறவனை ஸ்வாமித்துரோஹியென்றெண்ணி கலிபுரு ஷன் மிகவும் பாதிக்கிருனென்று தருமவிஷயமான வசனமிருக்கிறதேயின் றி பிர்ம்மஞானனுபவ நிஷேதமில்லை ஆனுல் மஹாவாக்கியார்தச் சிறவணுதி களால் பிர்ம்மஞானனுபவம் சித்தித்தவனுக்கு ஸ்ர்வகருமஸன்யாஸம் கலிபு ருஷனுல் கெடுக்கப்பட்டால் மறுஜன்மமுண்டாகுமோவெனில் ஞானனு பவம் சித்தித்தவனுக்கு வருணுச்சிரம கருமங்கள் தூங்கிறவனுடைய கைபூ

சிண்டுபோல் தன்னால் நழுவுமாகில் மறுஜன்மமுண்டாகாது. புத்திபூர்வமாக வருணாச்சிரமங்களைத் தள்ளுவனாகிலவன் ஞானானுபவமுண்டானவனல்லவென்று திடமாக நிச்சயிக்கவேண்டியது. ஆனால் சுகர் ஜடபரதர் தத்தாத்திரேயர் ரிபுநிதாகர் துர்வாசர் நாரதர்முதலிய வெகுபெயர்கள் ஸர்வகருமஸன்னியாஸிகளும் பிர்ம்ம ஞானானுபவமுள்ளவர்களுமாகப் பிரசித்தர்களே அவர்களுலகபிரஞ்ஞையற்று தூங்கிறவன் கைச்சிண்டுபோல் கருமங்கள் நழுவினவர்களுமல்லவேயெனிலவர்களிக்கலியுகத்திலிருந்தவர்களோ வேதசாஸ்திரப்பிரவர்த்தனாதியதிகார பதங்களற்றவர்களோ அங்ஙனமில்லாததினாலவர்களை யதிகாரமற்ற இக்காலமனிதர்களுக்கு வுபமைசொல்வது தப்பு ஆதலாலிவ்விடத்தில் முமுக்ஷுவான புருஷன் ஸர்வகாம்ய கருமஸன்யாஸத்துடன் மஹா வாக்கியார்தச் சிரவணாதிகளால் பிர்ம்மஞானானுபவியாகியும் தனதாச்சிரமகருமங்களை கூடியவரையிலு மீசோபநிஷத்தினிரண்டாவது மந்திரப்படி தேகம் விழுகிறவரையிலுஞ் செய்யவேண்டியதவசியம் இங்ஙனம் அப்பயதீக்ஷிதரால் செய்யப்பட்ட பாலபோதினியில்அ-வது ஸர்வஸாரப்பிரகரண முற்றிற்று.

௯-வது ஈசநிலைப்புப் பிரகரணம்.

இனி ஸகுணப் பிர்ம்மத்திற்கே பிரசித்தமான ஈசுவர சப்தத்தை நிற்குணப் பிர்ம்மத்திற்கும் சுருதிகள் சொன்னதுபோல் நாமும் சொல்வதில் ஸகுண பக்தர்களுக்கும் நிற்குண ஞானயோகத்தால் கைவல்யம் சித்திப்பதையு மீச நாஸ்திகர்களுக்கு மீசாஸ்திகத்துவஞ் சித்திப்பதையும் கருதி ௯-வது ஈசநிலைப்புப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

கேழ்வி. இவ்வுலக கர்த்தனாக வொரு ஈசன் வேறிருக்கிறானென்பது வீணான கொள்கை ஏனெனில் சேதனர்களான ஜீவர்களாலேயே அசேதனங்களான பஞ்சமாபூதங்களை யெடுத்து விசித்திரங்களான வுலக வஸ்துகளுண்டுபண்ணப்படுகின்றனவல்லவா ஆதலால் அனாவச்சியமான வீசனை கற்பிப்பது வுபயோகமற்றதென்பவருக்கு

உத்தரம். இவ்வுலக கர்த்தனாகிய ஈசனொருவனிருக்கிறானென்றே தீர்மானிக்கப்படுகின்றது ஏனெனில் ஸர்வஞ்ஞத்துவம் ஸர்வ சக்தித்துவம் ஸச்சிதானந்த ரூபத்துவம் ஸர்வ வியாபகத்துவம் முதலிய குணங்களுள்ள அவனின்றி மற்ற கிஞ்சித்ஞர்களான ஜீவர்களாலாவது மூலப்பிரகிருதி மாயை அவித்தை பஞ்சபூத பரமாணுக்களென்ற இவ்வசேதன வஸ்துக்களாலாவது இவ்வுலகத்தின் ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் செய்யமுடியாது

சங்கை. இவ்வசேதன வஸ்துக்களின்றி யவ்வீச னொருவராலே யே உலகச் சிருஷ்டியாதிகளை செய்யமுடியுமா

உத்தரம். காகிதம் பேனா மஷி இவைகளின்றி மஹா வித்துவானா லுமெழுதமுடியுமா இதினால் அவ்வித்துவானைக் காட்டிலும் அசேதனங்களாயி ன காகிதம் முதலியவை பெரிதுகளாகி அதினால் சேதனனான அவ்வித்துவா னுக்கு இகழ்ச்சை நேரிடுமோ. ஆதலால் ஈசன் பிரகிருதி முதலிய வஸ்துக் களைச் சாதனங்க ளாக்கிக்கொண்டதினால் குற்றப்பட்டவனாகான். அவனே சகலத்தையும் வியாபித்துக்கொண்டிருக்கிறானென்பதை கச-வது சுவேதா சுவதரமென்ற வுபநிஷத்தும் சொல்கின்றது. அதாவது

𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌿𑌨𑌂 𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑌯𑌵𑌭𑍂𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

இதின்பொருள். மாயையைப் பிரகிருதியாகவும் மாயாவியை மகேசுவரனாகவும் அறிவான். இவ்வுலகமெல்லாம் அம்மகேசுவரனுடைய அவயவங்களான பிரகிருதி முதலிய பூதங்களால் வியாபிக்கப்பட்டவை.

சங்கை. அவ்வீசன் ஸர்வ வியாபகனாகில் சகலருக்கும் அநுபவத்தில் காணவேணுமே இவ்வுலகத்தால் மூடப்பட்டிருப்பதால் காணப்படவில்லையெனில் அப்பொழுது உள் வெளி மத்தியெங்கும் வியாபித்தவனென்பது சித்தியாதே.

உத்தரம். ஒரு புருஷன் ஸ்திரீவேஷம் தரிக்குங் காலத்தில் அவனுடன் கூடியிருந்த மற்றொருவன் வேஷக்காரனை காணாமல் ஸ்திரீயையே கண்டபோதிலும் வேஷத்தை யழித்துப் பார்த்தபொழுது புருஷனை நன்றாகக் காணுவதுபோல் இவ்வுலக நாம ரூபங்களை யழித்துப் பார்ப்பவர்களுக்கு ஈசன் காணப்படுவார்.

சங்கை. உலகத்தைப் படைத்த அவ்வீசனாலல்லவா அழிக்கக்கூடும் கிஞ்சித்ஞனான ஜீவனால் அழிக்கமுடியுமா.

உத்தரம். சுழுத்தி மூர்ச்சை முதலிய அவஸ்தைகளில் ஜீவன் உலகத்தை யழித்திருக்கவில்லையா அங்ஙனம் இப்பொழுதே னழிக்கக்கூடாது. ஆனால் சுழுத்தியிலுள்ளவனே ஈசனென்றெண்ணவேண்டாம். புத்தி ஒடுங்கினபொழுது உலகம் தோற்றாததினால் ஈசனால் கல்பிக்கப்பட்டு நித்தியம் இருந்தபோதிலும் ஜாக்கிராவஸ்தையில் மனதையொடுக்கினால் உலகந்தோற்றாமல் ஈசனைத் தெளிவாகப் பார்க்கலாம் எவ்வளவும் சந்தேகமில்லை.

சங்கை. ஈசனின்றி பஞ்சபூதங்களாலேயே இவ்வுலகமேனுகக்கூடாது அசேதனமானபால் தன்னுல் தயிராகவில்லையோ ஜலம்தன்னுலாலங் கட்டியாகவில்லையோ சமுத்திரத்தில் விழுந்தமழை ஜலம் முத்துக்களாகவில்லையோ அசேதனமான சரீரத்திலு ரோமங்களுண்டாகவில்லையோ இங்ஙனம் அனேகதிருஷ்டாந்தங்களை காண்பிக்கலாமே.

உத்தரம். கரும்புப்பால் பதினிமுதலியவை காச்சலதிகப்பட்டு கர்க்கண்டாவதுபோ லுஷ்ணமதிகப்பட்டு மேகத்தின் ஜலம் ஆலங்கட்டியாகின்றது அவ்வுஷ்ணம் மூன்ருவது பூதத்தின்குணம் அவ்வக்கினியும் அசேதனனுதலால் மற்றொரு சேதனனுன ஜீவனுலேயே பிரயோகிக்கப்படுவதுபோல் உலகத்திற்கெல்லாம் காரணமும் பெரிதுமான அக்கினியைப்பிரயோகிக்க வல்லமையுள்ள ஒருசேதனன் அவச்சியமல்லவா அசேதனமான அயக்காந்தத்திற்கு மூசிக்கும் சேர்க்கையு மொருபுருஷன் சமீபத்தில் செய்வித்ததினுலல்லவா உண்டாயிற்று அவ்விரண்டும் தூரத்திலிருந்தால் தன்னுல் சேரவில்லையே இங்ஙனம் ஸகலதிருஷ்டாந்தங்களிலும் அசேதனங்களொன்றுக்கொன்று சேருகிறதற்குச் சேதனனொருவனவச்சியமாகவே யிருப்பதால் அளவிடக்கூடாத வுலகக்காரணங்களான பஞ்சமாபூதங்களை யொன்றி லொன்றைச் சேர்ப்பிக்க ஸர்வவியாபகனுன ஒருசேதனனவச்சிய மிருக்க வேண்டும் எ-வது தைத்திரீயவுபநிஷத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது.

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி
யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி ||

இதின்பொருள். எதினிடத்திலிருந்து இப்பூதங்களுதித்து ஜீவித்து எதைஅடைந்து பிரவேசிக்கின்றனவோ அதேப்பிர்ம்மம் அதையறி.

சங்கை. இப்பூதங்களெல்லா மதினிடத்திலுண்டாயின வென்று சொல்லப்பட்டதேயின்றி யவனே யுலகத்தைவியாபித்திருப்பதாகச் சொல்லவில்லை குடம் சட்டிபானை இவைகளில் மண்வியாபித்திருக்கின்றதேயின்றி கொசவன் வியாபித்திருக்கவுமில்லை இச்சுருதி யுக்த்தியனுபவங்களா லீசன் ஸர்வகர்த்தனுயினும் ஸர்வவியாபகனென்பது சித்திக்கவில்லை.

உத்தரம். ஸ்திரீவேஷத்தில் புருஷனுடைய ஸ்வரூபமுழுவதும் வியாபிக்கவில்லையா. இதினுல் சக்திமாத்திரம் வியாபித்தது ஸ்வரூபம் வியா

பிக்கவில்லையென்றெண்ணவேண்டாம். அக்கினியின் சக்தியான சூடுவியாபித்தஇடம் முழுவதும் அக்கினி வியாபிக்கவில்லையா சகல திருஷ்டாந்தங்களும் முழுவதும் பொருந்தவேண்டிய நியமமில்லையே இங்ஙனம் அண்டசராசரங்களை யெல்லாமொரே வஸ்துவேவியாபித்திருப்பதால் பிராணிகள்தோறும் வெவ்வேறீசனென்று சங்கிக்கஇடமில்லை. பரவஸ்துவான ஈசனொருவரென்பதற்கனந்தம் சுருதிகளுமிருக்கின்றன. ௯-வது சாந்தோக்கியவுபநிஷத்தில்.

𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍 । 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌸𑍇𑌯𑌂 𑌦𑍇𑌵𑌤𑍈𑌕𑍍𑌷𑌤 𑌹𑌨𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌅𑌨𑍇𑌨
𑌜𑍀𑌵𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌵𑌾𑌣𑌿 ।

இதின்பொருள். ஓஸௌம்முகனான சிஷ்யா இவ்வுலகம் விரிஷ்டிக்குமுன் இரண்டற்று ஒன்றானபிர்ம்மமே ஆயிற்று அவ்விந்ததேவதையான திம்முத்தேவதைகளை விருஷ்டிக்கப்பார்த்தது இச்ஜீவனுடன் அனுப்பிரவேசித்து நாமரூபங்களைச்செய்கிறேன்.

இதில் பிர்ம்மம் ஆன்மாதேவதை யென்றபதங்கள் ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால்களாயிருப்பதா லீசனுக்கன்னியப் பொருளுடையதாகுமென்று சங்கிக்கவேண்டாம் ஒரேவஸ்துவே சிவன் நாராயணன்முதலியபதங்களாலுஞ் சொல்லப்படும்.

சங்கை. அவ்வீசனொருவனே அசேதனங்களான வஸ்துக்களாகி அவைகளால் சேதனர்களான ஜீவர்களைப்புசிப்பித்து அவர்களுடன் கலந்திருந்தும் தாமரையிலைத் தண்ணீர்போலொட்டற்றிருக்கக் காரணமேது அங்ஙனமொருவனால் முடியுமா.

உத்தரம். கிஞ்சிஞ்ஞனான ஒருஜீவனும் சொப்னத்தி லொரு புருஷனைப் பார்த்துப்பேசுகிறானல்லவா இவ்வனுபவம் யாவருக்குந் தெளிவானதே சொப்னத்தில் பார்க்கப்பட்ட புருஷனுடைய உருவமாக பார்த்தவனுடைய மனதே பரிணமிற்றும் பார்க்கப்பட்டவனுடன் பேசவும் வல்லமையுண்டாயிற்றல்லவா. ஒரு ஜீவனுக்கிங்ஙனம் வல்லமையிருந்தால் ஸர்வவல்லமையுள்ள ஈசனுக்கேனிங்ஙனம் சித்தியாது சித்திக்கலாமென்பதற்கு யுக்தியுமனுபவமும் காண்பித்தபடி சுருதியும் ஸ்மிருதியுமிருக்கின்றன.

ஏதாவாநஸ்ய மஹிமாதோ ஜ்யாயாம்ஶ்ச பூருஷ꞉ | பாதோஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி | மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத꞉ ஸநாதந꞉ | விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்திதோ ஜகத் ||

இதின்பொருள். உலகம் இவ்வளவும் இவனுடைய மஹிமை இதைக் காட்டிலும் அப்புருஷன் பெரியோன் இவ்வுலகமெல்லாம் இவனுடைய ஒரு அம்சம் முவ்வம்சங்கள் ஆகாயத்தின்மேல் அமிருதமாயிருக்கின்றனவென்று புருஷஸூக்த வுபநிஷத்திலும் சாசுவதமும் ஜீவனுமாகியும் ஜீவலோகத்திலிருக்கின்ற ஓர் அம்சம் என்னுடையதே, இவ்வுலகத்தையெல்லா மொரோ அம்சத்தால் வியாபித்திருக்கிறேனென்று பகவத்கீதையென்ற ஸ்மிருதியிலுஞ் சொல்லப்பட்டது.

சங்கை. உலகமும் ஜீவர்களும் அவ்வீசனுடைய ஒருஅம்சமாகி லப்பொழுது அம்சத்தின் துன்பங்களை யம்சியே அனுபவிக்கும்படி நேரிடுமே உடலிலொருவிரலைச் சேதித்தா லத்துக்கத்தை யான்மா அனுபவிக்கிறானல்லவா.

உத்தரம். விரலம்சம் அதினம்சி உடலேயின்றி ஜீவனல்லவே விரலைச்சேதித்ததினுலுடல் முழுவதுஞ் சேதிக்கப்பட்டதா ஆதலாலுபமை சரியல்ல உபமானத்தையுபமேயமாக எண்ணுவதும் சரியல்ல ஓரம்சமே போக்தா போச்சியமென்றிரண்டு விதமாகி அதிலொன்று மற்றொன்றை யபிமானித்ததினுல் துன்பங்கள்நேரிட்டா லத்துன்பங்கள் முப்பாதங்களுள்ள அம்சிக்கெங்ஙனம் நேரிடும் நூருபலமுள்ள ஒருசுவர்ணக்கட்டியி லொருபலத்தைக் கண்டித்துத் தட்டானுயுதத்தால் அடித்தால் அவ்வடி மற்றக்கட்டிக்கு நேரிடுதோ முதலாவது கண்டிக்கும்பொழுதுகட்டியிலு மடிகொண்டதே யெனில் தேன்கூட்டிலிருந்து தன்னுலொரு துள்ளிவிழுவதுபோல் பிறரை யபேக்ஷியாமல் தனது சக்தியாலேயே வேர்பட்டபடியா லக்குற்றமில்லை ஒரு உபமானத்தாலுபமேயம் பூர்ணமாகாதபக்ஷத்தில் மற்றொரு உபமானத்தைச்சொல்வது நியாயமே இன்னபாகத்தைப்பற்றி யிவ்வுபமானஞ்சொல்லப்பட்டதென் றெண்ணுமல் வீண்குதர்க்கஞ்செய்வதும் புத்திசாலிகளுக்கு லக்ஷணமல்ல ஆதலாலீசனுக்கும் ஜீவனுக்கும் அம்சாம்சிபேதம் சரியானயுக்திகளாலும் நிலைத்ததென் றறியவேண்டியது.

சங்கை. ஈசன்மிகக்காருண்ணிய முடையவரென்று ஸர்வப்பிரமாணங்களாலும் பிரசித்தமல்லவா. அங்ஙனமொரு ஈசனிருந்தால் பிராணி

களுடைய துன்பங்கள் தன்னால் நிவிர்த்தியாகும். அவன் நித்திய திருப்தியு டையவனாதலால் ஜீவனுடைய கோரிக்கைமுதலிய தொழில்களை யெதிர் பாராமலே துன்பங்களை நீக்கலாமே ஈசா ஈசாவென்றிரவும் பகலும் துன் பங்களையனுபவித்துக் கதரினவர்களுக்கு மீசன்பிரத்தியக்ஷமாகாததினா லீ சனில்லையென்றே நிச்சயிக்கலாம்.

உத்தரம். பச்சைவிறகில் நெருப்புப்பற்றாததினால் நெருப்புக்கெ ரிக்கிறவல்லமையுமில்லை அவ்வுருவமுமில்லையெனக் கூடுமா காஞ்சவிறகி ல் தன்னால்பற்றுவதுபோல் பக்குவசித்தமுடைய ஜீவனுடையதுன்பங்களை யீசன்நீக்குவது பிரத்தியக்ஷமாகவே யிருக்கின்றது. எங்ஙனமெனில் பிற ருடைய பார்வையில் துன்பமிருந்தபோதிலும் சிலர்தங்களைத்துன்பங்களற் றுத்தன்னியர்களாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களல்லவா. பக்குவசித்தர் களை வலியேவரித்து இரக்ஷிப்பாரென்று ௩-வது கடவல்லியுபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது.

𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾
𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 । 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷
𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍 ।

இதின்பொருள். ஆத்மாவென்ற இவ்வீசன் அதிகவியவஹாரங்களா லும் ஸூக்ஷமபுத்தியாலும் வெருக்கேள்வியாலும் அடையப்படான் இவ னேயெச்சீவனைவரிக்கிறானோ அச்சீவனாலேயே அடையத்தக்கவன். இவ் வீசன் அச்சீவனுக்கு தன்சொரூபத்தைக்கொடுக்கிறான்.

என்றிங்ஙனம் சொல்லியிருப்பதா லீசன் காருண்ணியமற்றவனொன் றும் உருவமேயற்றவனொன்றுஞ் சொல்வது சரியல்ல. சிலரவ்வீசனை மலடி மகன் முயல்க்கொம்புமுதலிய வஸ்துக்களுக்குத் துல்லியமாகச் சொல்லு கின்றனர். அவர்கள் சுருதியுக்தியனுபவமென்ற முப்பிரமாணங்களையும டாதவர்களென்று தீர்மானிக்கவேண்டியது.

சங்கை. இவ்வுலக நாமரூபங்களை யளித்தவர்களுக்கீசன் காணப்படு வாரென்று முன்சொல்லப்பட்டது. அதுசரியல்ல அழியாதவர்களுக்கும் கா ணப்படவேண்டும். ஏனெனில் உலகத்தினுள்மட்டினு மீசனிருந்தாலல்ல வா அவனைப்பார்க்கிறதற்கு உலகத்தையழிக்கவேண்டும். வெளியிலுமிருக் கிறதாகச்சொல்லுகிறபடியால் ஸாதாரணமாக யாவருமீசனைக் காணலாமே குளத்தினுள்ளடக்கிய குடத்தினுள்ளும் வெளியும் ஜலத்தைக்காணுகிறோ

மே அங்ஙனமீசனை வெளியிலுங் காணவேண்டாமா அங்ஙனங்காணாததினாலீசனிருக்கிறானென்பதை நம்பவிடமில்லை.

உத்தரம். உபமானத்தில் குடத்தின் வெளிஜலம் பார்க்கத்தக்கது உபமேயத்திலதினுள் ஜலம் பார்க்கத்தக்கதாதலால் உபமானம் சரியல்ல ஆயினும் குடத்தினுள் ஜலத்தை யனுமானத்தால் காண்பிக்கலாம். எங்ஙனமெனில் ஸத்து சித்து ஆனந்தமென்ற பிர்ம்மலக்ஷணங்கள் சகலவஸ்துக்களிலுங் காணுகின்றன. குடத்தினுள்ளும் வெளியும் மண்ணேகாணுவதுபோலுலகத்தினுள்ளும் வெளியுமீசனைக் காணப்படுவதை புருஷஸூக்தவுபநிஷத்தும் ௱௬-வது ஸரஸ்வதிரஹஸ்ய வுபநிஷத்தும் சொல்லுகின்றன.

யச்ச கிஞ்சிஜ்ஜகத்ஸர்வம் த்ருஶ்யதே ஶ்ரூயதேபி வா । அந்த
ர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித: । அஸ்தி பாதி ப்ரி
யம் ரூபம் நாம சேத்யம்ஶபஞ்சகம் । ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜக
த்ரூபம் ததோ த்வயம் ।

இதின் பொருள். இவ்வுலகத்திலெதுகாணப்படுகின்றதோ கேழ்க்கவாவதுபடுகின்றதோ அதையெல்லாமுள்ளும் வெளியும் வியாபித்திருக்கின்றவர் நாராயணர் பரப்பிர்ம்மம் பரமாத்மா பரமேசுவரன் பரமசிவனென்றபெயருள்ள பரவஸ்துவென்று முன்னமே சொல்லியாயிற்று. ஸத்து சித்து ஆனந்தம் நாமம் ரூபம் இவ்வைந்துகளில் ஆதிமூன்றும் பிர்ம்மரூபம் மற்ற இரண்டும் உலகரூபம்.

இங்ஙனம் சுருதி யுக்தியனுபவங்களென்ற முப்பிரமாணங்களாலுமீசனுள்ளும் வெளியுங்காணப்படுகின்றனன்.

சங்கை. ஜீவனீசனுடைய ஒருஅம்சமென்று முன்சொன்னதில் தீயும் பொரியும்போல் வேறுபட்டிருப்பதினால் ஸேவ்வியஸேவக பேதஞ்சித்தித்து ஜீவன்தன்னியனுக்குக் காரணமானபோதிலும் பகவானுக்குப்போல் பகவதம்சனுக்கும் விஷயப்புசிப்பு நேரிடாமலிருக்கவேண்டியதற்காக இரஜ்ஜு ஸர்ப்பம்போல் ஜீவன் கல்பிக்கப்பட்டவனென்றாவது ஜலஸூரியன்போல் பிரதிபிம்பமென்றாவது சொல்லவேண்டும். அங்ஙனம் பிரசித்தமானமதவாதிகளுமுலகத்திலிருக்கின்றனர். சுருதி யுக்தியனுபவங்களுக்கு மித்தீர்மானமொவ்விருக்கும் ஆதலால் ஜீவனம்சமென்றும் ஈசனம்சியென்றுந் தீர்மானிப்பது சரியல்ல.

உத்தரம். இரஜ்ஜுவைப்போலீசனையும் ஸர்ப்பத்தைப்போல் ஜீவனையுந்தீர்மானிப்பதிலும் ஜீவன் பொய்யாகவில்லை. ஏனெனில் ஸர்ப்பமே ஸத்தியமல்லவா. இரஜ்ஜுவைப் பார்த்தவனுடைய மனதில் முன்பார்த்திருந்த ஸர்ப்பம் பதிவாயிருந்தபடியாலச்சர்ப்பம் பொய்யல்ல பயத்தையும தேகத்தில் நடுக்கத்தையும் செய்வித்தபடியால் காரியத்தால் காரணமான ஸர்ப்பமும் மெய்யே. அதுபொய்யாகில் பயத்தையும் நடுக்கத்தையு முண்டுபண்ணாது. கண்ணுக்கு விஷயப்பட்டபடியால் ஸர்ப்பமுருவமுள்ளதே அங்ஙனம் ஜலத்தில் பிரதிபிம்பித்த ஸூரியமண்டலம் கண்ணுக்கு விஷயப்படுவதாலு மதற்குக்காரணமான ஜலம் ஸத்தியமாயிருப்பதினாலும் ஜலமும் பிரதிபிம்பமு மொன்றானதாலுமிரண்டும் ஸத்தியமேயாம். ஜலத்துக்குநேரிட்ட துன்பங்களை யப்பிரதிபிம்பமுமனுபவிக்கும். இங்ஙனம் அவித்தை புத்தி முதலிய விகாரக்கூட்டத்தில் பிரதிபிம்பித்த ஜீவனுக்கு விஷயப்புசிப்பும் பிம்பமாகிய பகவதம்சத்திற்கப்புசிப்புனில்லாமையும் சித்திக்கலாம். அதலால் ஜீவனை மலடிமகனைப்போல் சொன்னால்மட்டிலும் பிரத்தியக்ஷஅனுபவத்திற்கு விரோதப்படுமேயின்றி மற்றஜல ஸூரியன் ரஜ்ஜு ஸர்ப்பமுதலிய உபமைகளால் விரோதமில்லை. இவ்வர்த்தத்தை ௧-வது ஈசாவாஸ்ய உபநிஷத்திலும் ௫-வது முண்டகவுபநிஷத்திலுந் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா:। ஏவம்
த்வயி நான்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே॥ த்வா ஸுபர்ணா
ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோர
ன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யனஶ்னன்னன்யோ அபிசாகசீதி।

இதின் பொருள். இவ்விடத்தில் தனதாச்சிரமத்திற்குச் சொல்லிய நித்தியகருமங்களை நூறுவருஷம்வரை செய்துகொண்டே ஜீவிக்க இச்சிப்பான். இங்ஙனம் ஜீவிக்கின்ற நரனாகிய உன்னிடத்திலிதற் கன்னியங்களான காம்மியகருமங்க ளில்லாததினால் கருமம்பற்றாது. இச்சரீரமாகிய ஒருமரத்தை ஜீவாத்மாவும் பிரத்தியகாத்மாவுமாகிய இரண்டுபக்ஷிகள் ஸ்நேகிதர்கள்போல் சேர்ந்திருக்கின்றனர். அவ்விருவர்களிலொருவன் கருமப்பயனைப் புசிக்கிறான். மற்றவனதை புசியாமல் விளங்குகிறான்.

இங்ஙனம் இரதயகுஹையிலிரண்டான்மாக்க ளிருக்கிறதாக வியாஸஸூத்திரம் முதலிய வெகுப்பிரமாணங்களிருப்பதாலும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் சரியாக இரண்டான்மா இருக்கவேண்டியதும் உள்ளும்

வெளியும்-வியாபித்திருக்கின்ற பரமேசுவர னொருவனிருக்கவேண்டியது மவச்சியமாயிருக்கின்றன.

சங்கை. ஒருஆன்மாவே விஷயப்பார்வையால் ஜீவனென்றும் ஈசப்பார்வையால் பிரத்தியகான்மாவென்றும் சொல்லலாமே ஏன்பிம்பமும் பிரதிபிம்பமுமாக்கி இரண்டாகப் பகுத்துச் சொல்லவேண்டும்.

உத்தரம். ஒரு ரூபாயைப் பதினறு அணவாகச்செய்துகொள்வது நலமல்லவா பிரதிபிம்பமும் அவித்தைமுதலிய உபாதிகளும் அசேதனமாதலால் விஷயப்புசிப்புச் சித்தியாதென்றெண்ணத்தாலல்லவா பகுத்துச்சொல்வதில் பயப்படுகிறாய் அக்குற்றமில்லை எங்ஙனமெனில் ஒருநிமிஷமாவது பிம்பத்தைவிட்டுப் பிரதிபிம்பம் வேறுபடாமல் ஒரேகுறையிலிருப்பதா லச்சன்னிதி பெலத்தால் அசேதனங்களும் சேதனர்கள்போல் கருமங்களைச்செய்யவும் புசிக்கவும் கூடும்.

சங்கை. ஈசனையாராதிக்கிறவன் ஜீவான்மாவா அல்லது பிரத்தியகான்மாவா.

உத்தரம். ஜீவன்விஷயப்புசிப்பால் வெளிமுகப்பட்டவனுதலா லப்புசிப்பற்று வுள்முகப்பட்ட பிரத்தியகாத்மாவே ஈசனையாராதிக்கின்றவனென்றறியத்தக்கது.

சங்கை. ஈசாராதனைக்கு முக்கியச்சாதனங்களான வெளிக்கருவிகளு முள்கருவிகளும் ஜீவனுடைய கருமத்தால் கிடைத்தபடியால் அவனுக்கே சொந்தங்களாகும் இவையன்றி ஈசனையாராதிக்கப் பிரத்தியகான்மாவுக்கு வேறுகருவிகளில்லையே எங்ஙன மீசனையாராதிப்பான்.

உதத்ரம். ஆன்மாவிஷயங்களைப்பற்றிய சுத்தப்பட்டபொழுது கருவிகள் ஜிவனுக்குச் சொந்தங்களும் விஷயங்களைப்பற்றுமல் சுத்தப்பட்டபொழுது பிரத்திய காத்மாவுக்குச்சொந்தங்களும் காகக்கண்போலாகும் காகமானது ஒரேகண்கருவியை யிருமுகப்படுத்திக்கொள்ளுகின்றதல்லவா ஆதலால் குற்றமில்லை இங்ஙனம் புசிக்கிற ஜிவான்மாவையும் புசிப்பிக்கிற பிரத்திய கான்மாவையும் இரதயகுறையில் பகுத்துச்சொல்லாமலொரே ஆன்மாஇருக்கிறதாகச் சொன்னலப்பொழுது ஈசன்வெளியில்மாத்திரம் வியாபித்தவனென்று சித்திக்குமேயின்றி யுள்ளும்வியாபித்தவனென்பது சித்தியாது ஆதலாலீசன் தனதம்சத்தாலுள்ளும் அம்சியால் வெளியிலும் வியாபித்திருக்கிறவனென்றறியத்தக்கது இப்பிரத்திய காத்மாபகவதம் சனுயிருந்

தும் பிரகிருதியில் பற்றியிருப்பதாலிவனுக்கு மேலான பரமேசுவரன் ஒன்றிலும் பற்றாமல் வேறாக எங்குமிருக்கிறானென்று வேதத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

பொஃவெஃதஸ்ஸ்வரஃவெஃதாஃவெஃதஜைவஃதிஷ்டிதஃ

தஸ்யப்ரக்ருதிலீநஸ்யயஃபரஸ்ஸமஹேஸ்வரஃ ।

இதின்பொருள். வேதத்திறுதியில் ஸ்வரமென்று சொல்லப்பட்டவனும் வேதாந்தத்திலிருக்கிறவனும் பிரகிருதியிலற்றினவனுமான அவ்வான்மாவுக்குப் பரன்மஹேசுவரன்.

சங்கை. உலகமெல்லாம் பிரகிருதியும் புருஷனுமாகவே காணப்படுகின்றன ஒவ்வொரு சரீரத்திலு முள்ப்பூர்ந்து யோசித்துப்பார்த்தால் அங்கும் சகலமும் பிரகிருதிபுருஷமயமாகவே காணப்படுகின்றன இங்ஙனமிருக்கிறதை பார்க்கும்பொழுது பிரகிருதியில்பற்றினவன் ஜீவனென்றும் பற்றற்றவனீசனென்றுஞ் சொல்லக்கூடியதேயின்றி ஈசன் வேறொருவனிருக்கிறானென்பது நம்பத்தகாததாயிருக்கின்றது.

உத்தரம். பிரகிருதியில் பற்றினவனுக்கு அப்பற்றறவேண்டுமாகில் மற்றொன்றையடுக்கவேண்டியது அவச்சியமல்லவா மரத்தின்மேல் கொப்பைப்பிடித்தாலல்லவா கீழ்கொப்பைவிடலாம் பிரகிருதிகாரியங்களில் பற்றியிருக்கும்பொழுதாவது பிரோகனன்றி தன்னால்விஷயங்களை புசிக்கமுடியுமா ஸகலப்பிராணிகளையும் இரக்ஷிக்கவல்லமையுள்ள ஒரு ஈசனில்லாத பக்ஷத்தில் பதியற்றபசுக்கள்போலவும் அரசனற்றபிரஜைகள் போலவும் ஜீவர்கள் கெதியற்று கெட்டுப்போவார்கள் புசிக்கிற பிரகிருதிபுருஷனும் புசிக்கத்தக்கன விஷயவஸ்துக்களும் புசிப்பிக்கிற பரமேசுவரனுமிருக்கிறதாக ஶ்வேதாஶ்வதர உபநிஷத்திலும் காயத்திரியென்ற மஹாமந்திரத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது.

ஸொக்தாஜொஜாஃ்வெஃதாஃ்ஷஃவாஸஃ்வெஃ்தாஃ்தி

வியஃவெஃஷமிஃதஃ। தஃஸவிதுஃவரெணஃஹமெஃதெவஸ்ய

யீமஹி। யியொயொநஃவெஃவொதயாஃ।

இ—ள். புசிக்கிறஜீவன் புசிக்கத்தக்கனவுலகம் ஏவல்செய்கிற ஈசனிம்மூன்றையுமெண்ணியிதெல்லாம் மூன்றுவிதப்பிர்ம்மமாகச் சொல்லப்பட்டது எவன்நம்முடைய புத்திகளை-யேவல்செய்கிறானோ ஸூரியதேவனுக்கும் மேலானதேஜோமயனாகிய அப்பரமேசுவரனை தியானிக்கிறோமென்றிங்ஙனம் சகலவேதசாஸ்திரங்களிலும் பிரேரகனான பரமேசுவரனுபாஸிக்கத்தக்கவனாகச் சொல்லப்பட்டேயிருக்கிறான்.

சங்கை. உலகத்தில் சில அத்துவைதிகள் சொல்வதாவது ஈசனொருவனே சத்தியன் ஜீவனென்பவன் முக்காலத்திலுமில்லை வியவகாரதசையில் ஈசனுக்கன்னியன்போல் தோற்றுவதும் அவித்தையென்ற மாயையாலேயின்றி மெய்யல்ல இரஜ்ஜுவில் ஸர்ப்பம்போலவும் சிப்பியில் வெள்ளிபோலவுமீசனிடத்தில் ஜீவன்தோற்றுவதே. ஆகலாலீசன் ஸேவியனென்றும் ஜீவன் ஸேவகனென்றுமெண்ணுவது தப்பு. சாஸ்திரமெல்லாமிப்பேதத்தை நீக்கவந்ததேயின்றி பேதத்தையுறுதிப்படுத்தி ஜீவனீசனை யுபாஸித்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்று சொல்லக் கருத்துடையவையல்ல அதுநீயாகிறாயென்றும் நான்பிர்ம்மமாகிறேனென்றும் பிரசித்தங்களான மகாவாக்கியங்களாலும் ஜீவனுக்குமீசனுக்கும் அபேதமே சொல்லப்படுகின்றது ௨வது கேனோபநிஷத்திலும் ௰வது பிரகதாரண்ணியவுபநிஷத்திலும் ஈசோபாஸனை நிந்திக்கப்பட்டிருக்கின்றது அதாவது,

𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌦𑍇𑌵
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌅𑌥 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁
𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌰𑌿𑌤𑌿 ।

இ—ள். எதைக்கண்ணால் பார்க்கவில்லையோ எதினால் கண்களைப் பார்க்கிறானோ அதேபிர்ம்மம் நீயறியெதையு பாஸிக்கின்றனரோ அந்தவஸ்து பிர்ம்மமல்ல பின்எவன்நான்வேறு இதுவேறென்று தேவதையை அன்னியமாக வுபாஸிக்கிறானோ அவனறிந்தவனல்ல அவன் பசுவுக்கொப்பாவான்.

என்றிங்ஙனம். வெகுவாக ஈசோபாஸனையை வேதத்திலேயே நிந்தித்திருப்பதால் அத்துவைதமே முடிவானது.

உத்தரம். உபநிஷத்தெல்லாம் வெளிப்பட்ட விக்கிரஹாராதனங்களை நிந்தித்ததுகளேயின்றி யுள்பட்ட பரமேசுவராராதனத்தை நிந்திக்கவில்லை அத்துவைதிகள் சொல்லியபடி அத்துவைதம் ஸத்தியமே ஆயினுமவ்வறிவு வந்தபின் மனப்பிராணேந்திரியங்களெல்லாம் வசப்பட்டு பரமவுபசாந்திசுகம் கிடைக்கிறதற்காகப் பரமேசுவரனை யுபாஸிக்கவேண்டியது அவசியம். ஏனெனில் ஸகலவுபநிஷத்துகளையும் படித்து அத்துவைதமே ஸத்தியமென்று மஹாவாக்கியப்படியறிந்தவனுக்கும் மனமுதலிய கருவிகள் வசப்படாமலெப்பொழுதுஞ் சலித்துக்கொண்டேயிருப்பதைப் பார்க்கிறோமல்

லவா அங்ஙனம் சலியாமலிருக்கின்ற உத்தமபுருஷனை யுலகத்தில் காணு வது அரிதாயிருந்தபோதிலும் யுக்த்தியால் பார்ப்பதில் மனதையொருலக்ஷி யத்தில் கட்டவேண்டியது அவசியமாகக்காணுகின்றது ஆதலால் அத்துவை தஞானம்வந்தபின் னீசனைத்தியானித்து பாவிப்பது நியாயம் இத்தீர்மானத் திற்கனந்தமுபநிஷத் பிரமாணங்களிருக்கின்றன. ஆயினும் ருவது முண்ட கவுபநிஷத்து ௰உவது கைவல்லிய வுபநிஷத்து ௰சவது சுவேதாசுவதர வுப நிஷத்து இம்மூன்றிலும் தெளிவாகச்சொல்லியிருக்கின்றது அதாவது.

தத்ஸ்ய தத்வஸ்ய நிஷ்கலஸ்ய ஜ்ஞானந்ஃ ஸ்ய ஸாக்ஷிஸ்ய

நயோ மாநிவேஷ | தஸ்ய நயோமா நமதாக வஸ்து

தேவாத்மஸக்திம் ஸ்வ குணைர்நிகூடாம் |

இ—ள். பின்நிஷ்களனான அவனைத் தியானிக்கிறவன் பார்க்கிறா ன் சிரவணமனனநிதித்தியாஸன யோகத்தாலறி தன்குணங்களால் ரஹஸ் யமாயிருக்கின்ற தேவாத்மசக்த்தியை அந்தப்பிர்ம்மவாதிகள் தியானயோகத் தையடுத்து காரணமாகப்பார்த்தார்கள்.

இங்ஙனம் அத்துவைதஞானமுதித்தபின்னும் பரமேசுவரனை யுபா விக்கவேண்டியது முக்கியமாயிருப்பதால் அத்துவைதஞானமே முடிவான தென்பது சரியல்ல அதெங்ஙனமெனில் உலகத்திலொருவரனுக்கும் கன் னிகைக்கும் குலகோத்திர ஜாதகாதி ஸகலப்பொருத்தங்களும் சரியாயிருப் பதை யறிந்தமாத்திரத்தா லவர்களை தம்பதியென்று சொல்லக்கூடுமோ விதி ப்படி விவாகமான பின்னல்லவா சொல்லலாம் பின்னேகாந்தச்சேர்க்கையா ல் மோக்ஷமென்றபுத்திரன் ஜநித்தா லப்புத்திரன் மாதாவையே யடுத்திருப் பதுபோல் ஜீவனுக்கே மோக்ஷம் ஈசன்நித்தியமுக்த்தனாதலாலவனுக்கு மோ க்ஷதை சிந்திக்கவேண்டியதில்லை ஜீவனுக்கு மோக்ஷார்த்தமாக பரமேசுவர னைச்சேரவேண்டிய தவசியமாயிருப்பதால் அத்துவைதஞானிகளு மவ்வீச னையுபாவிக்கவேண்டிய தவசியமென்று நிலேத்தது.

சஙகை. உலகத்தில் விசிஷ்டாத்து வைதிகள் சொல்வதாவது பக வானொருவரோ வைகுண்டத்தில் வஸிக்கின்றவர் அவருடைய சக்த்தியானது சராசரப்பிரபஞ்சத்தை யெல்லாமுள்ளும் வெளியும்வியாபித்தது சந்திரமண் டலமேக தேசத்திலிருந்தபோதிலும் சந்திரிகையானது எங்கும்வியாபித்திரு ப்பதுபோலாகும் சக்த்தியும் சக்த்தியுடையவனு மொன்றாதலால் சக்த்தியை யுபாவித்தாலும் முடிவில் சக்த்தனைச்சேரலாம் நதியில் விழுந்த கட்டைமு

தலானவஸ்துக்கள் ஸமுத்திரத்தைச் சேருவதுபோல் ஜீவன் தனதுஇரதயத்திலும் மற்றவுலகங்களிலும் வியாபித்திருக்கின்ற பரமேசுவரனென்ற பகவானுடைய சக்தியை விதிப்படியாராதித்தால் மோக்ஷத்தை யடைவதில் சந்தேகமில்லை அதுநீயாகிறுயென்ற மகாவாக்கியத்திற்கு உலகச் சிரிஷ்டி முதலியகருமங்கள் இலக்ஷிமீபதித்துவம் முதலிய குணங்களிவைகளன்றி மற்றஐசுவரியாதிகளி லீசனுக்குச் சமானனுவாயென்று பொருளையுஞ்சொல்லுகின்றனர் இம்மதத்தில் ஜீவேசுவரபேதம் நன்றுகச் சித்திக்கிறபடியால் நித்தியசேவகனுகிய ஜீவனுக்கு மனக்கருவிகளெல்லாம் வசப்பட்டு பரமவுபசாந்திசுகம் கிடைக்கலாம்.

உத்தரம். ஜீவேசுவர பேதத்தையொப்புக்கொண்டுஉபாஸனையை வுருதிப்படுத்தியிருப்பதாலு பாஸகனுன ஜீவனுடையமனக்கருவிகளடங்கத் தக்கதாயிருப்பதாலு மிம்மதத்தில் கூடியவரை குற்றமில்லை ஆயினும் பகவானுடைய சக்திமட்டும் ஸர்வவியாபகமென்ற கொள்கையால் ஜீவன்பிரபலமான வுபாஸனையை செய்தபோதிலு மித்தேகத்திலிருக்கும்பொழுது பகவானைத்தெரிசிக்க முடியாதென்றுயிற்று பகவானே ஸர்வத்திலுமிருந்தாலல்லவா இவ்விடததிலும் தெரிசிக்கலாம் அவரைத்தெரிசியாதவரை யுபசாந்திசுகங்கிடைப்பது நம்பத்தக்கதல்ல எனெனில் ஒருஅரசனைப்பார்த்துப் பிரயோஜனத்தைப் பெறவேண்டுமென்ற யெண்ணமுடையவனுக்கு அரசனுடைய சைன்னியத்தைப் பார்த்தமாத்திரத்தால் திருப்தியுண்டாகுமா சக்தியும் சக்திபுடையவனு மொன்றெனி லப்பொழுது சக்தியிருக்குமிடமெல்லாத்தையும் சக்தனும் வியாபித்திருக்கவேண்டும் அது அக்கினியுஷ்ண திருஷ்டாந்தத்தில் தான்சித்திக்கும் சந்திர சந்திரிகை திருஷ்டாந்தத்தில் சித்தியாது சுருதிமுதலியப் பிரமாணங்களும் நாராயணருள்ளும் வெளியும் வியாபித்தவரென்று சொல்லுகின்றனவேயின்றி அவருடைய சக்திமாத்திரம் வியாபகமென்று சொல்லவில்லை இதுநிற்க முடிவான மோக்ஷாவஸ்தையில் ஜீவனீசனுக்குச் சமானனுகிறுனென்ற கொள்கையுஞ்சரியல்ல ஏனெனில் ஸமுத்திரத்தில் சேரவேண்டிய எண்ணததுடன் நதியில்போட்டகட்டை ஸமுத்திரத்தையே சேருமேயின்றி யதைச்சேராமல் வேறுக இருக்கக் காரணமில்லை ஆதலாலிம்மதத்தில் மோக்ஷாவஸ்தையுஞ் சரியாகவில்லை இவ்விடத்திலேயே பகவானைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கக்கூடாமையால் ஜீவர்களுக்கீசனொருவருண்டென்று நம்பிக்கையுண்டாகவுமிடமில்லை.

சங்கை. தேகத்தினுள் வியாபித்திருக்கின்ற ஈசனைமனதென்றவுள்க்கருவியால் பார்க்கத்தக்கதுபோல் வெளியில் வியாபித்திருக்கின்ற ஈசனை

வெளிக்கருவியால் பார்க்கக்கூடுமே கண்ணென்றொருவராலு மீசனைபார்க்கப் படவில்லையே ஆதலாலீசனிருக்கிறானென்பது நம்பத்தக்கதில்லை.

உத்தரம். தேகமென்பது பிர்ம்மாண்டத்திற்கு வெளிப்பட்ட அபஞ்சீகிருதபஞ்சமா பூதங்களுக்கும் மேலான அவ்வியக்தமென்ற மூலப்பிரகிருதியே அதின்வெளியில் பார்த்தாலீசனைக் காணலாம் அவ்விடத்திற்கு மனமென்ற வுள்கருவிபோகுமேயின்றி கண்ணென்ற வெளிக்கருவிபோகாது இங்ஙனமிருக்க தேகத்தின் வெளியில் கருவியைவிடாம லீசனைகாணவில்லையென்று சொல்வது சரியா ஆனால் உள்ளிலும் வெளியிலும் போல் மத்தியிலீசனில்லையோ வெனில் மத்தியிலுமிருக்கிறார் சந்தேகமில்லை ஆயினுமிந்தமத்திப்பிரதேசத்திலிருக்கின்ற வஸ்துக்களை நீக்கினாலன்றி யீசனைப் பார்க்கலாம் ஒருசுவருக்குள்ளிருக்கின்ற ஆகாசத்தைப் பார்க்கவேண்டுமாகில் அச்சுவரையிடித்துத் தள்ளவேண்டுமல்லவா ஆதலாலீசன் ஸர்வவியாபகனென்பது நிலைத்தது இங்ஙனம் கூவது கடவல்லியுபநிஷத்திலும் சொல்லப்படுகின்றது.

அணோரணீயாந் மஹதோ மஹீயாந் ஆத்மாஸ்ய ஜந்தோர்நிஹிதோ குஹாயாம் | தமக்ரதும் பஸ்யதி வீதஸோகோ தாதுப்ரஸாதாந் மஹிமாநமீஸம் ||

இ—ள். அணுவுக்கணுவும் மஹத்துக்கு மஹத்துமான ஆன்மாவென்ற பரமேசுவரன் இந்தஜந்துவின் இரதயகுகையில் வைக்கப்பட்டவன் அகர்த்தனும் பெரியோனுமான அவ்வீசனை ஈசனுடைய பிரஸாதத்தால் சோகமற்றவன் பார்க்கிறான் இதின் கருத்து வியஷ்டிகுகையிலணுவும் ஸமஷ்டிகுகையில் மகத்துமிருக்கின்றது அணுஜீவன் அவனுக்கு மணுபிரத்தியகாத்மா மஹத்துமூலப்பிரகிருதி அதுக்கும் மஹானாகியபரமேசுவரன்.

சங்கை. தேகத்தினுள்ளிருக்கின்ற பிரத்திய காத்மாவென்ற பகவதம் சத்தை ஜீவனென்ற பெயரால் சுருதியில் வியவஹரிப்பதுண்டோ.

உத்தரம். அங்ஙனம் யெவது உபநிஷத்தில் வியவகரிக்கப்பட்டிருக்கின்றது ஆயினுமப்பெயரால் ஜீவனென்றே நிச்சயிக்கஇடமில்லை ஏனெனில் எதாவது ஒருசுலோகத்திற்கு அர்த்தஞ்சொல்லவேண்டுமாகில் லிங்கமென்ற அடையாளமும் பிரகரணமு மொத்திருக்கவேண்டும் நாம்காண்பிக்கப்போகிற சுருதியிலிருக்கின்ற ஜீவனென்றபதத்திற்கு பிரத்தியகாத்மாவின் பரத்திலே அர்த்தத்தைச்சொன்னால் தானிவ்விரண்டு பிரமாணங்களு மொத்திருக்கும் அதைக்குறிப்பது எங்ஙனமெனில்.

வாலாக்ரசதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச | பாகோ ஜீவ
ஸ விஜ்ஞேய ஸ சாநந்த்யாய கல்பதே ||

இ—ள் உரோமத்தின் நூற்றிலொருபாகத்தின் நூற்றிலொருபாக
ம்போலுள்ள அச்சீவன் அறியத்தக்கவன் அவன் ஆனந்தியமென்ற மோக்ஷத்
திற்காக கல்பிக்கப்படுகிறான் இதின்கருத்து அறியத்தக்கவனென்பதும்
மோக்ஷத்திற்காகவென்பது ஜீவனுக்குப் பொருந்தாது ஆதலாலிச்சுருதியிலு
ள்ள ஜீவபதம் பிரத்தியகர்த்மபரமேயாம் எங்ஙனமொரேபொருளுக்கு பர
மேசுவரனென்றும் பரப்பிர்ம்மமென்றும் பரமாத்மாவென்றும் பரமசிவனெ
ன்றும் பரமநாராயணனென்றும் அநேகபதங்கள் சுருதியிலேற்படுத்தப்பட்
டிருக்கின்றனவோ அங்ஙனமொரே ஜீவனென்றபதத்திற்கு தேகமென்றும்
இந்திரியமென்றும் பிராணனென்றும் மனதென்றும் பிரத்தியகாத்மாவென்
றும் அநேகம்பொருள்கள் சுருதியிலேயே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன
அந்தந்தப் பிரகரணத்திற்கு சிதமானபடியர்த்தத்தை யறியவேண்டியது ஆத
லால் குற்றமில்லை.

சங்கை. இவ்வுலகமெல்லாம் மகாப்பிரளய காலத்தில் அவியக்த்
மென்ற மூலப்பிரகிருதியி லொன்றாயடங்கி மெழுகுண்டையி லடங்கின
சொர்ணப் பொடிகள்போல் மறுகல்பாதியில் வெளிப்படும்பொழுது முன்
போல் வெவ்வேறாக ஜாதிபேதத்துடன் வருமென்பதற்குச் சரியான யுக்தி
யைகாணவில்லை அதற்குவிரோதியான யுக்திகளனந்தங்க ளிருக்கின்றன
வண்டுகளாலொவ்வொரு பூவிலிருந்து வெவ்வேறாக எடுத்துச்சேர்க்கப்பட்ட
தேன் கூட்டிலிருந்து வெளியான தேன்களுக்குப் பேதங்காணவில்லை ஸ
முத்திரத்தில் சேர்ந்த நதிஜலங்கள் மேகங்களால் வெளிப்பட்ட பொழுது
வெவ்வேறாகக் காணவில்லை சொர்ணப்பொடிகளும் அங்ஙனமே இவ்விடத்
திலெந்தக்காரணத்தால் மறுகல்பத்தில் ஜீவர்கள் வெவ்வேறாகவரக்கூடும் அதை
திருஷ்டாந்தத்துடன் ரூபிக்கவேண்டும்.

உத்தரம். நெல் அரிசி உளுந்து பயர் கடுகு முதலிய அநேகம் தி
ரவியங்களொன்றாகச் சேர்ந்திருந்ததுகளைப் பசுவும் சிசுவும் வெவ்வேறாக்
கவல்லமையற்றபோதிலும் பெரியமனிதன் பிரித்துவிடுவதுபோல் ஸர்வஅ
றிவும் ஸர்வவல்லமையுமுள்ள பரமேசுவரனிடத்தில் அபின்னமாயிருக்கின்
ற பிரகிருதியிடத்தி லுலகமெல்லாம் பிரளயகாலத்திலடங்கியிருந்தபடியால்
மறுகல்பத்திறுதியில் முன்போலவே வெவ்வேறாக அவ்வீசனால் ஜீவர்கள் க
ல்பிக்கப்படுகின்றனர் இதினாலும் ஸர்வவல்லமையுள்ள ஒருஈசனுண்டென்
பது நிலைத்தது இதுவிர்க்க ஈசனுடைய பிரகிருதிகள் அ பூமி ஜலம் அக்

ஷினி வாயு ஆகாயம் மனது புத்தி அஹங்காரம் இவ்வெட்டுகளிலும் பற்றியி ருந்த ஜீவர்களுடைய பூர்வபுண்ணியபாவகருமங்களுக்குச் சரியானபடிமனு கல்பத்தில் கணக்கில்லாத தூலதேகங்களை ஜீவர்களுடைய புசிப்புக்காக விரிஷ்டித்து அவைகளில் அவர்கள் பிரவேசிக்கும்பொழுது அவர்களை புசி ப்பிக்கிறதற்காக ஈசனும்கூட வேதிப்பொரிகள்போலவும் செல்வால்நுனி உரோமநுனி சாமைபரிசி இவைகளுக்குச் சரியான ஆகிருதிகளுடன் அனு ப்பிரவேசஞ்செய்தார் இவ்வர்த்தங்களை எவது கூவது உபநிஷத்துகளும் பக வத்கீதையும் சொல்லுகின்றன எங்ஙனமெனில்.

தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் | ததநுப்ரவிஶ்ய |
அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி |
பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச | அஹங்கார
இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ||

இ—ள். அவ்வஸ்துதேகங்களை விரிஷ்டித்து அதேஅனுப்பிரவே சித்தது இச்சீவனுடன் அனுப்பிரவேசித்து நாமரூபங்களைச் செய்வேன் பூமி ஜலம் அக்கினி வாயு ஆகாயம் மனதுபுத்தி யஹங்காரம்என்று பின்ன மான இவ்வெட்டுபிரகிருதியு மென்னுடையவை இதில்மனதென்றபதம் அ வியக்தத்தத்தையும் புத்தியென்றபதம் மஹத்தத்துவத்தையும் சொல்லும் இதினுபயோகத்தையும் ஜீவர்களுக்கு முற்கருமங்களும் ஆதியுத்பத்தியும் வந்தவிபரங்களையும் அடுத்தப்பிரகரணத்தில் விஸ்தரித்துச் சொல்லப்படும் இப்பிரகரணத்தில் சுருதியுக்தியனுபவம் என்றமுப்பிரமாணங்களாலும் உ லககர்த்தனை ஒருஈசனிருக்கிறனென்று, ஸ்தாபித்துவிட்டதாக யானெ ண்ணி மனமகிழ்ச்சையை மிகவுமடைகிறேன் ஆபினுமிது நன்ருகஸ்தா பிக்கப்படவில்லையென் றெவருக்காவது தோற்றி மஹாபுத்திசாலிகளுடைய யுக்திகளுடன் கலர்ந்து சரியான ஆக்ஷேபங்களை யெழுதினல் தெரிந்தமட் டிலும் ஸமாதானங்களை யெழுதச்சன்னத்தனுயிருக்கிறேன்.

இங்ஙனம். அப்பயதீக்ஷதரால் செய்யப்பட்ட பாலபோதினியில்

சப்தது ஈசுவிஷயப்பிரகரண முற்றிற்று.

௬-வது அமூர்த்தப்பிரகரணம்.

இனிபரமார்த்ததசையி லீசனுக்கு மூர்த்தியில்லையென்று சொல்வதற்கு.

௬-வது அமூர்த்தப்பிரகரண மாரம்பிக்கப்படுகின்றது.

